தென்றல்

ஆசிரியர் : கண்ணதாசன்

உள்நாடு (இலங்கை உட்பட) விலை இரண்டணா. | வெளிநாடு மூன்றணா | அலுவலகம் : 'தென்றல்' சென்னை-

மலர் 3 | சென்னை 6—10—56 சனிக்கிழமை | இதழ் 6

மாவீரர் மருது பாண்டியர்

'இந்திய' சரித்திரம் மறைத்து விட்ட இரண்டு மாவீரர்கள்! வெள்ளை ஏகாதிபத்தியத்தை அலற அடித்த இரண்டு வெற்றி வீரர்கள்! துப்பாக்கிகளையும் பீரங்கிகளையும் வாளும் வேலும் கொண்டு எதிர்த்த இரண்டு தமிழ் வீரர்கள்...

பெரிய மருது-சின்ன மருது!

இராமநாதபுரம் மாவட்டத்தைச் சேர்ந்த சிவகங்கைச்சீமை இன்று "பத்தோடு பதினொன்று; அத்தோடு இது ஒன்று!" எனக் காட்சி தருகிறது. ஆனால்......150 ஆண்டுகளுக்கு முன்னாலே......நமக்கு மூன்று தலைமுறைகளுக்கு முன்னாலே...சிவகங்கை என்றால், வெள்ளையர்களுக்குக் குலை நடுக்கம். எங்கே, சிவகங்கை, தங்கள் கையிலுள்ள மற்றப் பகுதிகளையும் விடுதலை செய்துவிடுமோ என்ற அச்சம்! வெள்ளை அதிகாரிகளின் கண்ணும் கருத்தும் அங்கேதான்!

இத்தகைய வீரச் சிறப்புப் பெற்றது சிவகங்கை என்பது நம்மில் எத்தனை பேருக்குத் தெரியும்? மருது சகோதரர்களின் கொடி, சிவகங்கைக் கோட்டையிலே கம்பீரமாகப் பறந்ததையும், அந்த மான மறவர்களின் பெருந்துணையையே நம்பி, தமிழக மக்கள் வாழ்ந்ததையும் நம்மில் எத்தனை பேர் அறிவோம்? சவமாகி, குழி சேர்ந்து, மண்ணாகி, புல் முளைத்துப்போன அந்த மாவீரர்களின் வரலாற்றை, சிவகங்கையைத் தவிர தமிழகத்தின் வேறு பகுதியினர் அறிவார்களா? அறியச் செய்தார்களா பலம் வாய்ந்த பத்திரிகைக்காரர்கள்? இல்லை! அவர்களுக்கு பகவத்சிங்கைத் தெரியும்! பாலகங்காதர திலகரைத் தெரியும். லாலா லஜபதி ராயைத் தெரியும்! 'பண்டித மோதிலால் நேரைப் பறிகொடுத்தோமே' என்று பாடத் தெரியும். 'உயிர் தமிழுக்கு; உடல் மண்ணுக்கு' என்று உழைத்த மறக்குல மன்னர்களின் வரலாற்றை அவர்கள் ஏன் வெளியிடப் போகிறார்கள்?

தமிழ் வீரர்களின் வரலாற்றை முழுக்க அறிந்துகொள்ள வேண்டிய கடமை தமிழர்களுக்குத்தான் உண்டு. காட்டிக்கொடுத்து வயிறு வளர்க்கும் கயவர் கூட்டத்திற்கும், இனத்துரோகிகளுக்கும் தமிழர் வரலாற்றைப் பற்றிக் கவலையில்லை. ஆனாலும் பெரும் பத்திரிகைகள் அவர்கள் கையில்தான் இருக்கின்றன. நிற்க.

1730-ம் ஆண்டு சிவகங்கைச் சீமையின் அரசுகட்டில் அமர்ந்தார் முதல் மன்னர் சசிவர்ணத்தேவர். 1750 வரையிலே அவரது ஆட்சி நீடித்தது. அவருக்குப்பின் பட்டத்திற்கு வந்தவர், முத்துவடுகநாதத் தேவர். அவர் 1772 வரையில் கொலுவிருந்தார். இந்த இடைக் காலத்தில்தான் இராமநாதபுரத்தில் வரி வசூலிக்கும் உரிமை பெற்றிருந்த ஆற்காட்டு நவாப் கும்பினிப் படைகளோடு சேர்ந்துகொண்டு 'இராமநாதபுரம் ஒழுங்காகக் கப்பம் கட்டவில்லை' என்ற குற்றச்சாட்டைக் கூறி இராமநாதபுரத்தின்மீது படையெடுத்தான். நவாபுவின் படைகளும் கும்பினிப் பட்டாளமும் ஜோசப் ஸ்மித் என்பான் தலைமையில் இராமநாதபுரம் நோக்கிப் புறப்பட்டன. நவாபுவின் குமாரனும் அதில் இருந்தான். படைகள் இராமநாதபுரத்தைக் கொள்ளையடித்தன. இந்தக் கொள்ளையின் போது வெள்ளையர்களுக்குப் பெரிதும் உதவியவன் துரோகத்தையே கலையாகக் கற்று வைத்திருந்த புதுக்கோட்டைத் தொண்டைமான் ஆவான். அவன், சர்தார் சதாசிவ அய்யர், ஆதிநாராயணன் என்ற இருவரின் தலைமையில் குதிரைப் படையும் காலாட்படையும் அனுப்பி வைத்தான். ஏன் இந்தப் படையெடுப்பு? எதற்காக? என்பதை ராமநாதபுரம் சேதுபதிகள் அறியு முன்பே, கும்பினிப் படையும் துரோகப் படைகளும் இராமநாதபுரத்தைக் கைப்பற்றிவிட்டன. அப்போது இராமநாதபுர சீமையை ஆண்ட சேதுபதி 9 வயதுச்சிறுவன். அவனும் அவன் தாயும் சகோதரியும் கைது செய்யப்பட்டுத் திருச்சிச் சிறையில்வைக்கப்பட்டனர். இராமநாதபுரம் பிடிபட்டதும் அந்த முக்கூட்டுப் படைகள் சிவகங்கைச் சீமையை நோக்கிப் புறப்பட்டன. அப்போதுதான் சிவகங்கைச் சீமையை முத்துவடுகநாதர் ஆண்டு கொண்டிருந்தார். அவரது ராணி தான் வேலுநாச்சியார். அவரது [illegible]தான் மருது சகோதரர்கள்.

1772ம் ஆண்டு [illegible] சிவகங்கையை நோக்கி வந்த முக்கூட்டுப்படை காளையார்கோயில் கோட்டைக்கு முன்னே அணி வகுத்து நின்றது. அந்தப் படைக்குப் பெருந்தொல்லையாய் இருந்தது காளையார் கோவிலிலிருந்து சிவகங்கை வரை அடர்ந்துகிடந்த பெருங்காடாகும். அந்தக் காட்டைச் சிதைத்தால்தான் போர் எளிதாகும் என முக்கூட்டுப்படை நினைத்தது. அதற்கும் 5000 காடுவெட்டிகளை அனுப்பிவைத்தான் புதுக்கோட்டைத் தொண்டைமான். துரோகப் படையின் துணை கொண்டு கர்னல் ப்ரான்ஜோர் என்பவன் காளையார் கோயில் அரணைக் கடுமையாகத் தாக்கினான். அந்தப் போரில் முத்துவடுகத் தேவரின் பட்டத்துராணி வேலுநாச்சி, வாள் தாங்கிப் புகுந்தாள். மருதிருவரும் கடுமையாகப் போரிட்டார்கள். எனினும் இறுதியில் துரோகப் படையே வென்றது. காளையார்கோயில் கோட்டையில் முத்துவடுகத்தேவர் உயிர்துறந்தார். சிவகங்கைச் சீமை குமுறி அழுதது. குறைந்த படையைக் கொண்டு மேலும் போரிடுவதில் பயனில்லை என்று கருதிய மருதிருவரும் வேலுநாச்சியும் சிவகங்கைச் சீமையை விட்டு வெளியேறினார்கள். அப்போது திண்டுக்கல்லில் இருந்த ஐதர் அலியிடம் போய்ச் சேர்ந்தார்கள். ஐதரும் அவர்களை வரவேற்று இருக்கை தந்து உபசரித்தான். வெள்ளைக் கம்பெனி சிவகங்கைச் சீமையைக் குத்தகைக்கு விட்டது. 'தடியெடுத்தவனெல்லாம் தண்டல்காரன்' என்னும் நிலைமை ஏற்பட்டது. எட்டு ஆண்டுக்காலம் இது நீடித்தது. இந்த இடைக் காலத்தில் சிவகங்கை மக்கள் தங்கள் தலைவர்களுக்குச் செய்தி அனுப்பிய வண்ணம் இருந்தார்கள். சில சில இடங்களில் கிளர்ச்சிகளும் நடந்தன. குத்தகைக்கு

எடுத்தவனும் ஒழுங்காக வரி வசூலிக்க முடியவில்லை. இந்தத் தலைவலியைத் தானே தீர்க்கமுடியாத நவாபு, ராணி வேலுநாச்சியை அழைத்து அவள் கையில் சிவகங்கையை ஒப்படைத்தான். வேலு நாச்சியோ ஒரு உயில் மூலம் பெரிய மருதுவுக்கு சிவகங்கையை மாற்றிக் கொடுத்தாள். 1780-ம் ஆண்டு நடந்த இந்த நிகழ்ச்சிக்குப் பிறகு 20 ஆண்டுகள் வரை சிவகங்கைச் சீமையிலே அமைதி நிலவியது. மருது சகோதரர்கள் ஆக்க வேலையிலே ஈடுபட்டார்கள். 1799-ம் ஆண்டு அக்டோபர் மாசம் 16-ந் தேதி வீரபாண்டியக் கட்டபொம்மன் தூக்கிலே ஏற்றப்பட்டதும் இருபது வருடத்து அமைதியையும் கிழித்துக் கொண்டு சிவகங்கைச் சீமை கிளர்ந்தெழுந்தது. பாஞ்சாலங் குறிச்சியும் துணை சேர்ந்தது. பாளையங்கோட்டையில் சிறை வைக்கப்பட்டிருந்த ஊமைத் துரை என்னும் குமாரசாமியைச் சிறை உடைத்து வெளிக் கொணர்ந்தது விடுதலைப் பட்டாளம். வெளிவந்த குமாரசாமி மீண்டும் பாஞ்சைக் கோட்டையை எழுப்பி, தூத்துக்குடியைக் கைப்பற்றிப் புதிய போர் முனையைத் துவக்கினான். ஆயினும் பாஞ்சை மீண்டும் வெள்ளையர் கைகளில் வீழ்ந்தது. அங்கிருந்து தப்பிய ஊமை தனக்கு ஆதரவு கொடுக்கக் கூடிய ஒரே இடமான சிவகங்கைச் சீமைக்கு வந்தான். ராணி வேலு நாச்சி அவனை வரவேற்றாள். அப்போது சிறுவயல் அரண்மனையிலிருந்த மருது சகோதரர்களிடம் அனுப்பி வைத்தாள். மருதிருவர் அவனை மனங்குளிர்ந்து வரவேற்றார்கள். ஆங்கில ஏகாதிபத்தியத்தையும், உள் நாட்டு அயோக்கியர்களையும் எதிர்த்து மூன்று வாட்களும் உயர்ந்தன. புதுக்கோட்டைத் தொண்டைமான் ஈதிகலங்கினான். எட்டயபுரத்தான், 'என்ன ஆகுமோ' என்று பயந்து கிடந்தான்!

அப்போது கலெக்டராக இருந்த லூஷிங்டன் சிவகங்கைச் சீமையின் மீது மருது பாண்டியர்களுக்கு உரிமையில்லை என்று வாதாடினான். சிவகங்கை மக்களும் மருது பாண்டியர்களும் அதை லட்சியம் செய்யவில்லை. 1801-ம் ஆண்டு மே மாதம் 23-ந் தேதிதான் ஊமைத் துரையின் புதிய கோட்டை வீழ்ந்தது. அதிலிருந்து ஆறு நாட்களுக்குள் மருது பாண்டியரின் மறவர் பட்டாளம் வெள்ளையருக்கு உரித்தாயிருந்த கமுதிக் கோட்டையைப் பிடித்துக் கொண்டது. அது முதல் மருது பாண்டியர்களுக்கும், வெள்ளையர்களுக்கும் நடந்தபோர் சொல்லத்தரமன்று. துப்பாக்கிகளை எதிர்த்து வாட்கள் மின்னின, பல வெள்ளையர்கள் அணு அணுவாகத் துண்டாடப்பட்டார்கள். கமுதியிலிருந்து திருப்புவனம், திருப்பாச்சேத்தி என்று தொடர்ந்து போரிட்ட மறவர் படைக்கு எதிராக, புதுக்கோட்டைக் கூலிப் படைகள் குவியலாயின. பல கோட்டைகள் வெள்ளையர் கைவசம் வந்தன. சிவகங்கையும் வெள்ளையர் பால் வீழ்ந்தது. அப்போதும் மனந்தளராத மருது பாண்டியர் படை, அரண்மனை சிறுவயலில் கோட்டை அமைத்துப் போராடியது. பல தினங்கள் பாடுபட்டு அந்தக் கோட்டையையும் பிடித்தது வெள்ளைப்படை. ஒக்கூர் என்ற ஊரையே தீக்கிரையாக்கிற்று.



அங்கிருந்து, காளையார்கோவிலுக்குச் சென்ற மருது பாண்டியர் அங்கே தமது கடைசி அரணை அமைத்துக் கொண்டு கடுமையாகப் போரிட்டார்கள். அந்தக் கோட்டையில் நடந்த போர்தான் மிகப் பெரும் போர்.

இறுதியில் தங்கள் கூடவே இருந்து தங்கள் உப்பையே சாப்பிட்டு வளர்ந்த கறுத்தையன் என்பவனால் மருது சகோதரர்கள் காட்டிக்கொடுக்கப் பட்டார்கள். அதற்கிடையில், வெள்ளைப்படைகளும் கூலிகளும் மருதிருவர் அக்கிரமமாக சிவகங்கையைக் கைப்பற்றிக் கொண்டவர்கள் என்றும், சிவகங்கை தேவமார்களுக்கு உரிய அரசு என்றும், மருது பாண்டியர் அகம்படியர்கள் என்றும், அவர்களுக்கும் ராணி வேலு நாச்சிக்கும் தொடர்புகாட்டி இழிவான பல கதைகளைக் கட்டி விட்டனர். உடையத்தேவன் என்ற துரோகி ஒருவனைப் புதுக்கோட்டையின் மன்னனாக முடி சூட்டினர். அதன் பலனாக மருதிருவர் படை பிளவு கண்டது. பலர் சிவகங்கைக்குத் திரும்பி விட்டனர். அதனால் தான் மருது பாண்டியரைச் சுலபமாகப் பிடிக்க முடிந்தது வெள்ளைப் படைகளால். ஒரு புளியமரத்துக்குப்பின்னால் நின்ற பெரிய மருதுவைத் தொலைவில் சுட்டு வீழ்த்தினான் ஒருவெள்ளை அதிகாரி. பல குண்டடிகளைத் தாங்கியும் இன்றைக்கும் அந்தப் புளியமரம் நின்றுகொண்டிருக்கிறது.

மருதிருவரை திருப்பத்தூர் சிறையில் தூக்கிலிட்டது வெள்ளை ஏகாதிபத்தியம். 27-10-1801-ல் தான் மருது பாண்டியர்கள் தூக்கிலிடப்பட்ட துன்பமயமான சம்பவம் நடந்தது. அதன் பிறகு அவர்கள் குடும்பம் தவியாய்த் தவித்தது. உடையத் தேவன் என்ற பொம்மை தொடர்ந்து அரசோச்சியது. மருது பாண்டியரின் உறவினர்களில் பல பேரை வேல்ஸ் தீவுக்குக் கப்பலேற்றி அனுப்பியது வெள்ளை ஏகாதிபத்தியம். அதிலே சின்னமருதுவின் மகன் துரைசாமியும் ஒருவன். அவனது எழுபது வேலையாட்களும் அதில் இருந்தார்கள். கண் காணாத அந்த 'பிரின்ஸ் ஆப் வேல்ஸ்' தீவில் 32 ஆண்டுகள் துடிதுடித்து, காற்றிலும் மழையிலும், பனியிலும் அடிபட்டு, மண்ணோடு மண்ணாய் மறைந்தான் துரைசாமி.

படிப்பவர் நெஞ்சைக் குமுற வைக்கும் மருது பாண்டியரின் சோக வரலாற்றை மிகவும் சுருக்கமாகத்தான் மேலே தந்திருக்கிறேன். ஒவ்வொரு நிகழ்ச்சியையும் உயிரோடு சித்தரித்து இரண்டு நூல்கள் எழுதியிருக்கிறார் தோழர் ந. சஞ்சீவி, எம்.ஏ, அவர்கள். திராவிட மக்கள் தங்கள் கண்ணைக் கருதிக் காக்க வேண்டிய பொற் சுரங்கங்கள் அவை. ஆங்கிலக் கம்பெனியின் குறிப்பேட்டிலிருந்தும், மேஜர் வெல்ஷின் 'ராணுவ நினைவுகளி' லிருந்தும், வெள்ளையர்கள் தங்களுக்குள் பரிமாறிக் கொண்ட கடிதங்களிலிருந்தும் ஏராளமான சான்றுகளை அப்படியே எடுத்துத் தந்திருக்கிறார். அதில் துரைசாமியைக் கப்பலேற்றியது பற்றியும் பல ஆண்டுகளுக்குப் பிறகு அவனை வேல்ஸ் தீவில் சந்தித்ததுபற்றியும் மேஜர் வெல்ஷே சொல்லும் வார்த்தைகள், தியாகியின் துயரம் துரோகிகளின் இதயத்தைக் கூட எவ்வளவு தூரம் தொட்டிருக்கிறது என்பதை எடுத்துக் காட்டுகின்றன.

சிவகங்கைப் பகுதி முழுக்கத் தோழர் சஞ்சீவி அவர்கள் அலைந்து ஏராளமான புகைப் படங்களையும் சான்றுகளையும் சேகரித்திருக்கிறார். பெரிய மருதுவின் மரண வாக்குமூலம் கூட அப்படியே தரப்பட்டிருக்கிறது. இந்த நூலுக்கு டாக்டர் மு. வ. அவர்கள் அணிந்துரை தந்துள்ளார்.

சிவகங்கை, காளையார் கோயில், அரண்மனை சிறுவயல், சங்கரபதிக்காடு ஆகிய பல பகுதிகளுக்கும் நானும் நண்பர்களும் சென்று பார்த்து வந்தோம். அங்கே பார்த்ததற்கும் தோழர் சஞ்சீவி அவர்களின் புத்தகத்தில் படித்ததற்கும் வித்தியாசமே இல்லை எனும்போது, இதை ஒழுங்கான வரலாறு என்று சொல்லுவதற்குத் தடையென்ன இருக்கிறது? எல்லா திராவிட மக்களின் இல்லங்களிலும் இந்த நூல்கள் இருக்க வேண்டும்.

1. மானங்காத்த மருது பாண்டியர்
   எழுதியவர் : ந. சஞ்சீவி, எம். ஏ. விலை ரூ. 1-8-0
2. மருதிருவர்
   எழுதியவர் : ந. சஞ்சீவி, எம். ஏ. விலை ரூ. 3-4-0

இந்த இரண்டு நூல்களையும்வெளியிட்டோர் :
பாரி நிலையம்,
59, பிராட்வே, சென்னை

—கண்ணதாசன்

டாக்டர் மு. வ. வின் அணிந்துரை

['மானங்காத்த மருது பாண்டியர்' என்னும் நூலுக்கு டாக்டர் மு. வ. அவர்கள் தந்துள்ள அணிந்துரையில் ஒரு பகுதி]

வடஇந்தியத் தலைவர்கள் வான்புகழ் பெறுகின்றனர்; இந்திய முழுதும் அறிந்து போற்றும் பெருமை அவர்களுக்கு எளிதில் வாய்க்கின்றது. உலகம் அறியும் சிறப்பும் வாய்க்கின்றது. தமிழ்நாட்டுத் தலைவர்கள் ஏற்ற அறிவும் ஆற்றலும் பெற்றிருந்தும் அவ்வாறு உயர்ந்து விளங்குதல் அரிதாக உள்ளது; காரணம், தமிழர் தம்மவரின் சிறப்புக்களை உணராமையும், உணர்ந்தாலும் போற்றாமையுமாகும். தமிழ்நாட்டுச் செய்தித் தாள்களும் பிறர்க்குத் தரும் பெருமையிலும் விளம்பரத்திலும் கால்பங்கும் தமிழர்க்குத் தருவதில்லை. அதனால் வடநாடு, புகழ் மிக்க தலைவர்கள் நிறைந்த நாடு ஆகின்றது; தமிழ்நாடு திக்கற்றுத் திகைக்க நேர்கின்றது.

நெடுங்காலமாகவே இத்தகைய புறக்கணிப்பு இருந்து வருதலை வரலாற்றுப் புத்தகங்கள் உணர்த்துகின்றன. வரலாற்றில் புகழ்பெற்ற வடநாட்டு வீரமாந்தர் பலர் காணப்படுகின்றனர்; தமிழ்நாட்டின் வீரப் பெருமக்களான கட்டபொம்மன், மருது பாண்டியர் முதலானோர்க்கும் உரிய சிறப்பு அளிக்கப்படவில்லை.

இந்த நிலை நீடிக்குமானால், தமிழகத்திற்கு உய்வு இல்லை என்பதை இன்று பலரும் உணர்ந்துவருகின்றனர்.

"போற்றுபவர் போற்றட்டும் புழுதி வாரித்
தூற்றுபவர் தூற்றட்டும்; தொடர்ந்து செல்வேன்
ஏற்றதொரு கருத்தை என(து) உள்ளம் என்றால்
எடுத்துரைப்பேன் எவர்வரினும் நில்லேன்; அஞ்சேன்!"

எண்ணம்

மலர் 3 | 6—10—56 | இதழ் 6

எங்கே?

◎

உழைப்பாளி மக்களுக்காக, ஓயாமல் நின் கால்கள் அலைந்தன; திராவிட சமுதாயத்தின் ஒரே இருவண்ணக் கொடியை நின் கைகள் அலுப்பின்றிச் சுமந்தன. "நாடு பிரியவேண்டும்; மக்களுக்கு வாழ்வு வேண்டும்; திராவிட சமுதாயத்திற்குச் சிறப்பு வேண்டும்" என நின் நா இடையறாது முழங்கியது. இடர்ப்பாடு காணும்போது, அதைக் களைந்து கழகத்தைக் காக்கும்வரை, நின் கண்கள் மூட மறுத்தன.

நின் என்பும் சதையும் குருதியும் நரம்பும் "கழகம்! கழகம்!" என்றே முழங்கின.

அவை அடங்கிவிட்டன.

உன் எண்ணம் அடங்கவில்லை.

என்றும் அழியாச் சிறகுண்டு அதற்கு!

இருதய சுத்தத்தை லட்சியமாகக் கொண்ட மாவீரனே! நின் உடல் மறைந்தது.

நீ மறையவில்லை!

நீ—அதுதான் உன் ஆசை! கொள்கை!

யுக யுகாந்திரங்களுக்கு நின் திருப்பெயர் எங்களை விட்டு நீங்காதிருக்குமாக!

எங்கள் நெஞ்சில் - வருந் தலைமுறைகளின் நெஞ்சில் நின்று நிலவுவாயாக!

நீயே நாங்கள் - நாங்களே நீ!

காண முடியா இடம்போன கண்ணியனே!

எங்கள் இதயத்தின் அவலம் பிறப்பிக்கும் தாறுமாறான ஒலிகள் ... உன் காதுகளில் விழவில்லையா?

நீ எங்கே! நீ எங்கே?

ஆம்! நாங்களே நீயாயிற்றே! நீ வேறு எங்கே இருக்கப் போகிறாய்?

கே. வி. கே. சாமி

தனைக் கொன்றார்; தமைக் கொன்றார்!

◎

கண்ணீர் பெருகட்டும்! கைகள் பிசைந்தழட்டும்!
உண்ணிறைந்த நெஞ்சம் உடைந்து சிதறட்டும்!
விண்ணிருந்து மீன்கள் வெலவெலத்து உதிரட்டும்!
மண்ணிருக்கும் பூக்கள் மாளட்டும்! மறையட்டும்!
ஆடும் மரங்களெலாம் அடியற்று வீழட்டும்!
அசைகின்ற பூங்கொடிகள் அத்தனையும் சாயட்டும்!
கூவும் குயிலினங்கள் கூண்டோடு தொலையட்டும்!
குளிர்ந்துவரும் இளங்காற்று(க்) கொதிப்பேறிப்
[போகட்டும்!

ஊருக் குழைத்தவனை உத்தமனை,(த்) கண்மணியை
வீரர்க்குள் வீரனென வேற்றவரும் போற்றிவரும்
சீருக்கு நாயகனை சிந்தனையின் தம்பியினை
போருக்கு முறையறியார் புறம்போகிக் கொன்றபின்னர்
நெஞ்சம் இருந்தென்ன நினைப்பென்ன, மண்
[ணென்ன!

வஞ்சகந்தான் இங்கு வாழுமெனில் - வகையறியா
நெஞ்சகந்தான் என்றும் நிலைக்குமெனில் - இந்
[நாட்டை(க்)
கொஞ்சமுமே வைக்காது குமுறும் கடல் கொளட்டும்!

◎

இறந்தனை தோழ! எங்கோ
ஏகினை! எம்மை விட்டு
மறைந்தனை! தோழர் கூட்டம்
மாசறு நின்பாற் கண்ட
திறந்தனை அன்பை, நெஞ்சத்
திண்மையை எண்ணி எண்ணிக்
கரைந்திடச் சென்றாய்! ஐயோ!
காண்பமோ நின்னை மீண்டும்!

இருநிறக் கொடியைத் தோழர்
ஏறிட்டு நோக்குந் தோறும்
ஒருநிறம் உன்னைக் காட்டும்;
உணர்ச்சியைக் கிளறும்; கீழே
மறுநிறம் வீணர் உன்பால்
வாங்கிய உதிரங் காட்டும்;
சிறுமொழி அறியாத் தோழர்
சிந்தையை வாட்டும்! வாட்டும்!

வாழையிற் கன்றும் உண்டு;
மன்னவர்க் கிளையர் உண்டு;
கோழையர்க் கவரே உண்டு!
குறுநிலம் வியர்வை வீழ்த்தும்
ஏழையர்க் குனையல் லாது
எவருண்டு? அதனால் அன்னார்
ஆழிவாய்ச் சத்தம் போல
அரற்றுதல் கேளாய் தோழ!

"அண்ணாச்சி!" என்று எம்மை
அழைக்குமோர் சொல்லை மீண்டும்
புண்ணான எங்கள் நெஞ்சம்
போயெவ ரிடத்திற் கேட்கும்?
திண்ணரும் தோழ! நாங்கள்
திரும்பிய இடமெல் லாமும்
கண்ணோடு வந்து நின்று
கதறவேன் வைத்துச் சென்றாய்?

கண்ணியம் கடமை யாவும்
கருத்தினிற் கொண்ட தம்பீ;
எண்ணிய எண்ணி யாங்கு
இயல்புடன் முடிக்கும் தம்பி
புண்ணுறும் உடலம் தாங்கிப்
போயினன் என்ற சேதி
அண்ணனின் காதில் வீழ
அன்றெலாம் கலங்கி நொந்தார்!

அண்ணனே கலங்கும் போது
அடுத்தவர் நிலையா தாகும்?
புண்ணெலாம் உனக்கே யல்ல!
பொருந்திய இலட்சம் தோழர்
கண்ணெலாம் கருத்தெல் லாமும்
கசிந்தது குருதி வெள்ளம்!
எண்ணெலாம் நிறைந்த நேய
இறந்தனை; மெலிந்தோம் நாங்கள்!

ஐயகோ! தமிழே! தாயே! அருமறை முப்பால் கூறும்
செய்யதோர் நெறியை வாழ்வில் செலுத்திய வீரன் தன்னைக்
கொய்தனர் நீசர்! நாங்கள் கொதிக்கிறோம்! வாலி ராமன்
கையிலேமடிந்த போழ்திற் கதறினர் தன்மை கொண்டோம்!

◎

சாமி! நின் அடிகள் போற்றி! தமிழ! நின் வீரம் போற்றி
தூய! நின் மேன்மை போற்றி! தோழனே! வாழ்க
[நெஞ்சில்!

— கண்ணதாசன் —

மாறன் காரி

அடர்ந்து ஓங்கி வளர்ந்து அமைதி அரசோச்சும் அந்தக் கானகத்தினிடையே பளிங்கு நீர்ப்பொய்கை ஒன்று! அழகே உருவெடுத்த பருவமங்கை ஒருத்தி இயற்கையின் வனப்பில் ஈடுபட்டுத் தன்னை மறந்து நீராடிக்கொண்டிருந்தாள் அந்தப் பொய்கையில்-தனிமையில்! குளிர்க்குவளையும், அல்லியும், அன்றலர்ந்த தாமரையும் அணி செய்யும் அம்மலர்ப் பொய்கையில் அந்தச் செந்தாமரைப்பூவும் ஒரு அணியாய் விளங்கியதெனலாம்!!

கட்டழகு தாலாட்டும் பட்டு நிகர் மேனி! காண்பவர் உயிர் கொல்லும் பருவச்சிலை!! மின்னலைப் பின்னிவிட்ட சின்ன இடை! கன்னலைப் பிழிந்தெடுத்து மதுர மொழி!! கருங்குயிலையும் வெல்லும் தேனிசை! நடனமிடும் கலாப மயிலையும் வெல்லும் அன்னநடை!!

நீராடி முடிந்தபின் அந்தப் பளிங்குச்சிலை, அங்கிருந்து செல்லும் ஒற்றையடிப்பாதை வழியாகச் சிறிதுதூரம் சென்று, அங்கேயுள்ள ஒரு ஓடைக்கரையில், உயர்ந்த பசும்புல் மேட்டின் கண் அமையப் பெற்ற பர்ணசாலையை வந்தடைந்தாள். ஆம்! கண்டார் மயங்கும் அந்த எழில் சிட்டு......ஒரு பர்ணசாலைப் பாவை!

அங்கே அவளுடைய தந்தை கிருஷ்ணஜிபட்டர் அவளை ஆவலுடன் எதிர்பார்த்துக்கொண்டிருப்பவர்போலக் காணப்பட்டார்!

நீராடி நனைந்துபோன உடையை மாற்றிக்கொண்டு ஒரு கையிலே பாலும், மற்றொரு கையிலே பழத்தட்டும் ஏந்தியபடி ஒயிலாகத் தன் தந்தையின் அருகிலே வந்து நின்றாள். அந்தப் பூங்கொம்பனையாள்-ராதை! கிருஷ்ணஜிபட்டர் தன் மகள் ராதையின் அழகை எண்ணிப் பூரித்தபடியே, அவள் கையிலிருந்த பாலையும், பழத்தட்டையும் வாங்கினார். அப்போது அவர்கள் கவனத்தை ஒரு குதிரை எழுப்பும் குளம்படி சப்தம் இழுத்தது!

ஓசையெழும் திசையை நோக்கினர் தந்தையும்-மகளும்! யாரோ ஒருவன் குதிரைமீது வேகமாகப் பர்ணசாலையை நோக்கி வந்து கொண்டிருப்பதைக் கண்டனர்!! உடனே பட்டர் தன் மகள் ராதையைப் பர்ணசாலைக்குள் போயிருக்குமாறு சைகை செய்துவிட்டுத் தான் மட்டும் தன் இடத்திலேயே அமர்ந்திருந்தார்.

குதிரையினின்றும் இறங்கிய வீரன் ஒருவன், ஓலையொன்றைப் பட்டரிடம் கொடுத்து வணங்கிவிட்டு, மீண்டும் குதிரை மேலேறி வந்த வழியிலேயே விரைந்து சென்று மறைந்தான்!

ஓலையைப் படித்து முடித்த கிருஷ்ணஜிபட்டருக்கு மகிழ்ச்சி தாங்கமுடியாமல்...வாய்விட்டு பலமாகச் சிரித்தார்! உடனே தன் மகள் ராதையை அழைத்து, அவளைத் தன்னருகே உட்கார வைத்துக்கொண்டார்!!

"ராதா! என்ன இது ஓலை என்று பார்க்கிறாயா? அழகான இந்தக் கானகத்தில் நாம் சாதிக்கப் போவது இன்று மாத்திரமல்லடி பெண்ணே... ...சரித்திரத்திலேயே அழியா இடம்பெறப்போகிறது!" என்றார் கிருஷ்ணஜிபட்டர் தன் மகள் ராதையை நோக்கி.

"என்னப்பா குழப்புகிறீர்கள்! காடு அழகாய்த்தான் இருக்கிறது. இங்கே தனிமையில் வாசம் செய்வது மனதிற்கு நிம்மதியையும் அளிக்கிறது. ஆனால் யாருமற்ற இங்கே இருந்துகொண்டு நாம் எதையப்பா சாதிக்கமுடியும்?" என்றாள் ராதை.

"அடி பேதைப் பெண்ணே! அழகும், அமைதியும் தானடி காதலுக்குப் பிறப்பிடம்! காமத்திற்கும் உறைவிடம்!! இதோ, சிவந்த உன் தளிர்க்கரங்களைத் தழுவி நிற்கும் இந்தப் பொன்னணிகள் நாளை செய்யும் ஒலியிலே... நமது வெற்றியின் முழக்கம் ஒலிக்கும். செம்பஞ்சுக் குழம்பு தோய்ந்து அழகியதாய் விளங்கும் உன்கால்களில் இப்போது கொஞ்சும் இந்தச் சிலம்புகளின் நாளைய புலம்பலில் இந்த நாட்டுக்குரியவர்களின் அழுகுரல் ஒலிக்கும்! பூவைப்போன்ற உன் மேனி, ஒரு வெறியனின் பிடியில் நாளை வாடித்தான்விடும்! ஆனால் வாடியபின் மீண்டும் மலர்ச்சி பெறாது கருகிவிழும் செழுங்கொடி மலரல்லவே இது!... ஒருமுறை வாடியபின் பன்மடங்கு அழகுபெற்று எழிலாய் விளங்கும் அதிசயமலர் அல்லவா இந்தப் பெண்களின் மேனி!! இந்தமேனி, நாளை ஒருவனின் பிடியிலே வாடுவதோ, கற்பு, கற்பு, என்று ஏமாளிகளைப்போல் கதறுவதோ பெரிதல்லடி நமக்கு! மேதினியில் ஆளப்பிறந்தோரின் வம்சம் சிறுகச் சிறுக வதைவதுதான் பெரிது...!!" என்றார் பட்டர் உணர்ச்சி கலந்த குரலில்!

தந்தையின் வார்த்தைகளில் அந்தரங்கமான விஷயங்கள் அடங்கிக் கிடப்பதை யுணர்ந்த ராதை தன் தந்தையை நோக்கிப் "புரியத்தான் சொல்லுங்களேன் அப்பா!" என்றாள் கொஞ்சலாக.

"ராதா! நாளை இரவு, சிற்றரசர்களெல்லாம் சிரம் தாழ்த்தி வணங்கிக் கப்பம் செலுத்தும்-பரந்த நிலபாகத்தையுடைய மன்னன் பராந்தகனின் வலதுகரமாய், தான் இட்டதே சட்டமென விளங்கும் இந்த நாட்டு முதலமைச்சன் 'மாறன்காரி' இங்கு தங்கப் போகிறான்...!" என்றார் பட்டர் தன் மகளை நோக்கிப் பெருமிதத்துடன். வியப்பில் மூழ்கிய ராதை... என்னப்பா கூறுகிறீர்கள்! இந்த நாட்டு முதலமைச்சன் மாறன் காரியா? அந்த மாவீரனா? கவிபல புனையும் மதுரகவியா!! அதுவும் இந்தக் குடிசையிலா!!! என்றாள்.

"ஆமாம்! வியப்பென்னடி இதில்......குடிசையல்லடி மகளே இது..! குமரிப்பெண் குறுநகையால் உயிர்வாங்கும் பொற்கூடம்!! பர்ணசாலை யென்பர் பாமரர்களும், ஏமாளிகளும்! மறைந்துபோன மன்னர்களையும், புகழ்மாய்ந்த, மாவீரர்களையும் கேட்டுப்பார்...! பட்டுநிகர் மேனியிலே புரண்டு இந்தப் பாரின் அவதிகளை மறக்க வைக்கும் பளிங்குக்கூடம் என்பார்!!

ராதை புன்முறுவல் பூத்தபடியே தலைகுனிந்தாள்!

"ஏனப்பா...நமக்கு இங்கு ஆடம்பர வாழ்வு ஏது? அறுசுவை உண்டிதான் ஏது? என்றாள் மெதுவாக...தன் தந்தையைக் கடைக்கண்ணால் பார்த்தபடியே...!"

மகள் ராதையின் கேள்வி கேட்டுக் கிருஷ்ணஜிபட்டர் வாய்விட்டு அந்தக் காடே அதிரும்படி சிரித்தார்!

"ஆடம்பர வாழ்வும், அறுசுவை உண்டியும் ஏதுக்கடி? ஐம்புலன்களும் இன்பம் அடையுமே ஆரணங்கு நீயிருந்தால்...!"

'களுக்' கென்று சிரித்தாள் ராதை! அது கண்ட பட்டர், "ஏண்டி, வெட்கமாய் இருக்கிறதா? இந்த வெட்கத்தை அவனிடம் காட்டு. மாவிரனும், மதுரகவியாம்! வீரமும், கவிதாரசனையும் கொண்டநின் தான் உன்னைக் கண்டதும் துடியாய்த் துடித்திருக்கிறான்-" என்றார் எங்கோ பார்த்தபடி.

"அமைச்சன் மாறன் காரி என்னைக் கண்டு மயங்கினரா! எப்போதப்பா?" என்றாள் ராதை வியப்புடன்.

"அடி என் செல்லக்கிளியே! நேற்று உன்னை நீராடச் செல் என்று நானே கூறவில்லையா? நீகூட, ஏனப்பா இந்த நேரத்தில் நீராடச் செல் என்கிறீர்கள் என்றாயே......நினைவிருக்கிறதா?" என்றார் பட்டர்.

"ஆமாம்" என்று தலையசைத்தாள் ராதா!

"அப்போதுதான் அமைச்சன் உன்னைக் கண்டான். அவன் நேற்று அரசாங்க காரியம் முடிந்து ஆனைமலையிலிருந்து மதுரைக்குச் செல்லும் வழியில் அந்தப் பொய்கைக்கரையில் தங்குவதாக ஏற்பாடு என்பதை அறிவேன்! ஏன்? அந்த ஏற்பாட்டைச் செய்து முடித்ததே நானும், அமைச்சனுடன் வந்த நம்முடைய ராஜகுருவும் தானே" என்று கூறிச் சிரித்துக்கொண்டார் பட்டர்.

"என்னப்பா இது...அந்நிய ஆடவர்களை மறைந்திருந்து பார்க்குமாறு ஏற்பாடு செய்துவிட்டுத் தன் சொந்த மகளைக் குளிக்கச் சொல்லியிருக்கிறீர்களே.........! துன்பத்தை விலைக்கு வாங்கவா" என்று கூறிய ராதை தன் அப்பாவின் தோள்களைப் பற்றிக் குலுக்கினாள் கொஞ்சலாக!

"துன்பம் என்னடி மகளே இதில்! மணமாகாத கன்னி, நீ அடையும் இன்பமோ கொள்ளை! கொள்ளை!! மறையவர் மனம் மகிழ, நாம் அடையும் பொன்னும், பொருளோ அதைவிடக் கொள்ளை! கொள்ளை!! என்று கூறித் தன் மகள் ராதையை அருகில் இழுத்து ஆதரவுடன் அணைத்துக் கிண்ணியில் இருந்த பாலைத் தானே புகட்டினார்!

மறுநாள் - மாலை - அமைச்சன் 'மாறன்காரி' தன்னுடைய தனி அறையில் குழப்பத்தில் ஆழ்ந்து கிடந்தான். இந்த நாட்டு முதலமைச்சன் மாறன்காரி-பக்தி நிறைந்தவன் என மக்களால் கூறப்படும் மதுர கவி...அவனுடைய உள்ளமா ஒரு அழகிய பெண்ணைக் கண்டு இப்படித் தடுமாற்றம் கொள்கிறது எனப் பலவாறு சிந்தித்தபடியே அங்குமிங்கும் உலவிய வண்ணமிருந்தான். ஆனால் நீராடும் நிலையில் தான் கண்ட அந்த நங்கையின் நினைவைத் தன் மனதை விட்டுத் தூக்கி எறிய இயலவில்லை அமைச்சனால்! குழம்பியபடியே கிடந்தான்.

இரவும் வந்தது. ராஜகுரு தேர் ஒன்றுடன் வந்திருப்பதாகச் சேவகன் ஒருவன் அறிவித்தான். ராஜகுரு தன்னை வழியனுப்பத் தேருடன் தயாராய் வந்திருப்பதை யறிந்ததும் அமைச்சன் மாறன்காரியின் உறுதி தளர்ந்தது! அவனை ஆட்கொண்டிருந்த குழப்பமும் மாய்ந்தது!!

ஆழ்ந்த பெருமூச்சு விட்டபடி நீலவானை நோக்கி நின்றான். அங்கே கண் சிமிட்டும் தாரகைகள், கைகாட்டும் ராதையோவென...' பொங்கும் முழுநிலவு, புன்னகை காட்டித் தன்னை 'வா'வென்றழைக்கும் மங்கையவள் 'பூ' முகமோ வெனக் காட்சியளித்துக்கொண்டிருந்தது!

கானகத்தின் அமைதியை உருண்டோடி வரும் தேரின் ஓசை கலைத்தது. அமைச்சன் ஏறிவந்த தேரும் பர்ணசாலையை நெருங்கிக்கொண்டிருந்தது.

"மணமாகாத கன்னி உனக்கும் முதல் இரவு இன்றுதான்! நினைவிருக்கட்டும்.....சொல்லியவைகளை மறந்து மயங்கிக் கிடக்காதே! அவனை நீ மயக்கி உன் சாமர்த்தியத்தைக் காட்டவேண்டும்" என்று பட்டர் தன் மகள் ராதையைக் கவனப்படுத்தியபடியே இருந்தார். ராதை தன் தந்தை கூறியவைகளைக் கேட்டுக்கொண்டே படுக்கையறையாக மாற்றப்பட்டிருக்கும் பர்ணசாலைக்குள் சென்றாள்!

பர்ணசாலை முன்பு தேர் வந்து நின்றது. அமைச்சன் தேரிலிருந்து

— 9-ம் பக்கம் —

இச் சிறுகதை கூடல்மாநகரத்தின் வரலாற்றிலே கடைச்சங்க காலத்திற்குப்பின் நிகழ்ந்த சில சரித்திரச் சம்பவங்களை அடிப்படையாகக் கொண்டு கற்பனை கலந்து தீட்டப்பட்டதாகும். மன்னன் **நெடுஞ்சடையன் பராந்தகன்** காலத்திலே முதலமைச்சனாகப் பணிபுரிந்தவன் இந்த **மாறன் காரி**! அற்றை நாளிலே மதுரைக்கு வடகிழக்கு ஆறு கல் தொலைவில் இருந்த **ஆனைமலை** எனும் இடத்தில் ஒரு கற்றளி எடுத்தும், அதற்கருகிலேயே அந்தணர்களுக்குச் சில கிராமங்களைத் தந்தும் அந்த ஆலயம் முடிவடைந்த பின், வழிபாட்டைத் துவக்கி வைப்பதற்குமுன்—உயிர் நீத்தான் இவன்.

இவனுக்குப் பிறகு முதலமைச்சனாகப் பதவி ஏற்ற இவனின் உடன் பிறந்த சகோதரன் - **மாறன் எயினன்** சிறப்பானதோரு முகமண்டபம் அவ்வாலயத்திற்கு அமைத்தும், அந்தணர்களுக்கு வேள்விகளின் பயனால் பொன்னையும், பொருளையும் ஈந்தும், கிராமங்கள் சிலவற்றைத் தானமாகத் தந்தும்...அவ்வாலய வழிபாட்டைத் துவக்கி வைத்தான்!!

இந்த வரலாற்றை வைத்துப் புனையப்பட்ட கதை இது.

எழுதியவர் :

— வையையார் கோமான் —

லாஸ்கியின் 'பொது உடைமை'

நூற்சிறப்பு

★

ஆசிரியர் : ஹெரால்டு ஜோஸஃவ் லாஸ்கி முன்னேற்றக் கருத்துடைய ஆங்கில அறிஞரும் எழுத்தாளரும் ஆவர். அவர் பிரிட்டனின் சமதருமக் கட்சியைச் சேர்ந்தவராயினும், அதன் அரசியல் துறையைவிட அதன் அறிவாராய்ச்சித் துறையுடனேயே பேரிதும் தொடர்புடையவர். தற்கால அரசியல் பற்றி அவர் எழுதியுள்ள நூல்கள் மிகப் பல.

லாஸ்கி 1893 ல் மாஞ்சேஸ்டரில் பிறந்தவர். அவர் மேக்கில் பல்கலைக் கழகத்திலும் யேல் பல்கலைக் கழகத்திலும் லண்டன் பொருளியல் குழுவிலும் வரலாறு, அரசியல் ஆகியவை பற்றிய பேராசிரியரா யிருந்தார். 'பொதுவுடைமை' என்ற நூல் அவரால் 1927-ல் எழுதப் பெற்றது.

பொதுவுடைமையைப் பற்றிய பொதுவுடைமையாளர் கருத்தின் ஆர்வத்துடன் முதலாளித்துவக் கோணத்திலிருந்து காண்பவரின் புறநோக்கும் அவர் நூலில் மிளிர்கின்றது. பொதுவுடைமையின் வரலாறும் விளக்கமும் அறிய விரும்பும் பொது மக்களுக்கு அது பேரிதும் பயன்படுவதாகும்.

பொதுவுடமை என்பது இன்று ஒரு குறிக்கோள் மட்டுமன்று. அது ஒரு முறை.

பொதுவுடைமையின் குறிக்கோளாவது : பொருளை உண்டு பண்ணும் கருவிகள், அதை மக்களிடையே பரிமாற்றம் செய்யும் உரிமை ஆகியவற்றைச் சமூகப் பொதுவுடைமை ஆக்கி, அதன் மூலம் வகுப்பு வேறுபாடற்ற சமூகத்தை நிறுவுவதே. அதை நிறைவேற்றும் வகை துறையாவது : சமூகப் புரட்சியை உருவாக்கி உழைப்பு வகுப்பின் வல்லாட்சியை உண்டு பண்ணுவதே.

பொதுவுடமையின் குறிக்கோள் புதிதல்ல. பிளேட்டோவின் 'குடியரசு' என்ற நூலில் அதன் அடிப்படைக் கனவார்வத்தைக் காணலாம். 5-முதல் 15-ம் நூற்றூண்டு வரையுள்ள இடைபிருட் காலத்தில் கிரிஸ்துவ மதவாதிகள்கூட, கிரிஸ்துவ மதத்தின் தொடக்கக் காலத்தை மக்கள் சரிசமத்துவம் நிலவிய பொற்காலமாகக் கற்பனை செய்திருந்தனர். 'கடவுள் ஒரே தந்தை; மக்கள் அனைவரும் ஒரே உடன் பிறப்பாளர்' என்ற சமத்துவக் கொள்கையைத் திவிரமாகப் பரப்பியதனுலேயே ஆங்கில நாட்டில் விக்ளிஃவ்வின் கூட்டத்தார் மட்டந்தட்டிகள், (Levellers) உளறுவாயர் (Bab bless) என்று அழைக்கப் பட்டதுடன் திக்கும் இரையாக்கப்பட்டனர்.

சமயச் சீர்திருத்தமும் மறுமலர்ச்சி இயக்கமும் நிலவிய 15-ம் நூற்றூண்டிலும், புலவரான ஸர் தாமஸ் மோர் பிளேட்டோவைப் பின்பற்றி ஒருபொதுவுடைமை உலகைக் கற்பனை செய்து திட்டினர். கிராம்வெல் காலத் தி லி ரு ந் த ஜெரார்டு வின்ஸ்டான்லி கூட்டுறவு முறை உற்பத்தி, செலாவணி முறை ஒழிப்பு, எல்லாருக்கும் சரிசம உழைப்பை வலியுறுத்தும் சட்டம் ஆகியவற்றைத் தம் பொதுவுடைமை அரசின் திட்டமாக்கினர்.

18-ம் நூற்றூண்டில் பிரான்சில் மெஸ்லியர் மோரெலி ஆகியவர்களும் பிரஞ்சுப் புரட்சியறிஞர்களான மாண்டிஸ்க்யூ, ரூசோ ஆகியவர்களும் இங்கிலாந்தில் காட்வினும் சமூக சமத்துவத்தைத் தம் அடிப்படைக் கோட்பாடாகக் கொண்டனர்.

ஆனால் 19-ம் நூற்றூண்டின் நடுப்பகுதிவரை இக்கருத்துக்கள் யாவும் குறிக்கோளைப் பற்றித்தான் கனவு கண்டன. வகை முறைகளில் கருத்துச் செலுத்தவில்லை. சமயவாதிகளைக் கூட இக் கருத்துக்கள் பெரும்பாலும் புண் படுத்தவில்லை. அரசியல், பொருளியல் ஆட்சிக் குழுவினரிடையிலோ, அவை பொதுவுடைமை வேதாந்தமாக அடிக்கடி உலவின.

தொழிற் புரட்சி இந் நிலையை மாற்றிற்று. அது ஒரு புதிய தொழில் முதலாளித்துவத்தை உண்டு பண்ணிற்று. முதலாளித்துவத்தின் கொடிய உருவத்தை இது விரைந்து பன்மடங்கு பெருக்கிக் காட்டிற்று. ஏழைகள் விரைந்து மேன்மேலும் பஞ்சை ஏழைகளாயினர். செல்வர்கள் மேன் மேலும் விரைந்து பெருஞ் செல்வர்களாயினர். அது மட்டுமன்று. செல்வரிடையே கூடப் பெரும்பாலரான சிறு செல்வர் நலிய, சிறுபாலரான பெருஞ் செல்வர் தழைத்தனர். செல்வர் ஏழை வேறுபாடு முன் கால அளவுகளைத் தாண்டி என்றும் விரிவுபட்டு வளர்ந்தது. முன் பல வகுப்புக்களாகத் தோற்றிய மனித சமூகம் இப்போது தெளிவாக ஆண்டான் வகுப்பு, ஆட்பட்ட வகுப்பு என இரு வேறு இனங்களாகப் பிளவுபட்டுக் கொண்டே சென்றது.

"தனி மனிதனை இப்போது யாரும் தனி மனிதனுகக் கருதுவதில்லை. சுழலுகின்ற இயந்திரங்களின் சக்கரங்களில் அவன் ஒரு சக்கரம்; சுற்றுகின்ற தொழிற்சாலை என்னும் பம்பரத்தில் ஒரு புள்ளி அவன்!" என்று கடுஞ் சினத்துடன் புதிய சமூகத்தில் மனிதன் நிலையைக் கண்டிக்கிருர், ஐஸாக் டிஸ்ரேலி.

1815-க்கும் 1848-க்கும் இடைப்பட்ட காலத்தில் பொதுவுடைமைக் கருத்துக்கள் காட்வினைப் பின்பற்றி ஒவென் என்பவரால் ஒழுக்க முறை வாதமாகவே பரப்பப் பெற்றன. ஆயினும், தொழிற் புரட்சியால் ஏற்பட்ட புதிய சூழ்நிலையின் காரணமாக, தொழிற் சங்கங்களின் தேசக் கூட்டுறவு, பொது வேலை நிறுத்த நடைமுறைகள் ஆகியவை வளர்ந்தன. அத்துடன் 1848-ல் இங்கிலாந்தில் ஆண் பெண்கள் அனைவர் மொழியுரிமை, மறைமொழிச் சீட்டு ஆகிய காலந்தாண்டிய முனைத்த கருத்துக்களைக் கொண்ட பத்திர இயக்கமும் (Chartist Movement) பிரான்சில் இரண்டாவது புரட்சியும் ஏற்பட்டன.

பொதுவுடைமை வேதாந்தத்தை ஒரு பொதுவுடைமைக் கட்சியாகவும் ஓர் உலகத் தொழிலாளர் இயக்கமாகவும் மாற்ற உதவிய சக்திகளுள், தொழிற் புரட்சிக்கு அடுத்த முக்கியத்துவம் உடைய சக்தி கார்ல் மார்க்ஸ் என்ற ஒரு தனி மனிதன் முயற்சியே! அவருக்குமுன் பொதுவுடைமை ஒரு கருத்துக் குளறுபடியாயிருந்தது. பல வகுப்பு நலங்களை நாடிய பல அறிஞர்களும் இதுவரை குறிக்கோள் அளவிலேயே அதில் ஊடாடினர். கார்ல் மார்க்ஸ் குறிக்கோளொற்றுமையை மட்டுமன்றிக் கருத்தொற்றுமையையும் உண்டு பண்ணினர். அது மட்டுமன்று. கருத்துத் துறையில் இறங்கி, வழி முறைகளும் திட்டமும் நோக்கி முனைந்து வரும் அவரே. சமய வேதாந்தப் போக்கு, ஒழுக்க முறைப் போக்கு ஆகியவற்றை விட்டு அவர் அதை ஒரு பொருளிய, சமூக, அரசியல் முறை ஆக்கினர்.

மார்க்ஸின் கோட்பாடு கூறு கூறுகப் பிரிக்கத் தக்கதன்று; அது ஒரு முழுநிறைக்கோட்பாடு ஆயினும் அதை உணரும் வகையில் நாம் அதில் நான்கு கூறுகளைக் காணலாம். ஒன்று வரலாற்றுக்கு அவர் தந்தபுது விளக்கம். இரண்டாவது அவர் பொருளியல் வகுப்புப் போராட்டக் கோட்பாடு. மூன்றுவது அவர் வகுத்த வகை முறையாகிய புரட்சிப் பிரச்சாரம். நான்காவது அவருடைய பொருளியல் தத்துவங்கள். அவர் தோற்றுவித்த இயக்கத்துக்குவகுப்புப் போராட்டக் கோடபாடும் புரட்சிப்பிரச்சாரமுமே முதுகெலும்பு போன்றவை ஆகும். வரலாற்றூராய்ச்சியும் பொருளியலும் இவ்விரண்டுக்கும் வலுத்தர உதவின. அவை அவர் கோட்பாட்டுக்கு ஒரு புதிய சமயத்தின் ஆர்வத்தையும், வரலாறு, அறிவு நூல் ஆகியவற்றின் உறுதியையும் ஒருங்கே அளித்தன.

உலகத் தொழிலாளர் இயக்கத்துக்கு மார்க்ஸ் அளித்த ஊக்கமும் உந்துவிசையும் மிகப் பெரியது. 1866-ல் ஜெனிவாவில் கூடிய உலகத் தொழிலாளர் கூட்டுறவுப் பேரவை (First International) பல தொழிற் சங்கத் தலைவர்கள், மிதவாதச் சீர்திருத்த வாதிகள் முயற்சியாலேயே கூடிற்று. இதில் தனித் தனி தன்னுரிமை உடைய தொழிற் சங்கங்களின் கூட்டுறவையே நாடிய தலைவர் பக்குனின் என்பவர். அவர் அரசியலற்ற நிலையையே (அராஜக நிலையையே) குறியாகக் கொண்டார். ஆனல் மார்க்ஸ் அரசியலைக் கைப்பற்றும் புரட்சிக் கொள்கையை வலியுறுத்தினர். இவ் வேறுபாட்டால் அது படிப் படியாக வலுவிழந்தது.

இரண்டாவது உலகத் தொழிலாளர் கூட்டவை கூடுமுன் 1871-ல் தீவிரக்கட்சி பிரான்சில் பாரிஸ் பொதுமைக்குழு (பாரிஸ் கம்யூன்) அமைத்து வேலை செய்தது. இது தோல்வியுற்றது. புரட்சி எதிர்ப்பாளர் ஆட்சியால் மார்க்ஸ் பிரான்ஸையும் ஜெர்மனியையும் விட்டு, பிரிட்டனிலேயே நாட்கழிக்க வேண்டியதாயிற்று. ஆனல் பிரிட்டனில் அவர் வறுமையிடையே செய்த வேலை பொதுவுடைமைக்கு அறிவுத்துறையிலும் செயல் துறையிலும் இரும்புக் கோட்டையை எழுப்ப உதவிற்று.

பாரிஸ் பொதுமைக் குழுவின் தோல்வி மார்க்ஸீயத்துக்கு உண்மையில் வலுத்தந்தது. பொதுவுடைமை ஆட்சி அமைக்க அரசியலைக் கைப்பற்றுவது மட்டும் அரசியல் மன்ற முறைகளும் போதா என்பதையும், படைத் துறையையும் கைப்பற்றி பணித் துறை வகுப்பையும் மாற்றியமைப்பதுடன், தொழிலாளர் வகுப்பினர் சார்பில் வல்லாட்சி நிறுவுவது அவசியம் என்பதை அது காட்டிற்று.

(தொடரும்)

தமிழில் :

பன்மொழிப்புலவர்

கா. அப்பாதுரை. M.A.L.T

கொள்முதல் இல்லா வியாபாரம்

வியாபாரிகள் முதலீடு செய்வார்கள். அந்த முதலீட்டைக் கொண்டு பொருள் வாங்குவார்கள். அந்தப் பொருளை விற்று இலாபம் பார்ப்பார்கள். இப்படிக் கொள் முதல் செய்து விற்பதற்குப் பெயர் தான் வியாபாரம் என்பது. ஆனால் கொள்முதல் இல்லாத வியாபாரத்தைப் பற்றி நீங்கள் கேள்விப் பட்டிருக்கிறீர்களா? அப்படி ஒரு வியாபாரம் இருக்கிறது. அதை ஒரு நூல் நமக்கு எடுத்துச் சொல்லு கிறது. அது எந்த நூல்? வேறு எதுவாயிருக்கும்? இது போன்று, கணவன் இல்லாமல் பிள்ளை பெறுவது, பிள்ளை வரமுடியாத அங்கங்களின் வழியாகப் பிள்ளை பெறுவது, பூமியைச் சுருட்டிக்கொண்டு கடலுக்குள் நுழைவது, கையைத் தொட்டதும் கர்ப்பம் தரிப்பது ஆகிய மந்திர தந்திர மாயங்களைக் காட்டும் புராணங்களில் ஒன்று தான், கொள்முதல் இல்லா வியாபாரத்தைப் பற்றியும் நமக்குக் கூறித் தருகிறது.

'ரோமாபுரி ராணிகளை'ச் சாடுகிற பக்த கோடிகள் விழுந்து விழுந்து படித்துத் தம் பெண்டு பிள்ளைகளுக்கும் கற்றுத் தரும் – திறந்த காமம் சிறந்து விளங்கும் காஞ்சிப் புராணம்தான் நமக்கு அந்தக் கருத்தைக் கூறுகிறது.

அந்த நகரிலே தாசிகள் தெரு ஒன்று! அதன் எதிரே வணிகர்கள் தெரு ஒன்று. தாசிகள் தெருவில் இருக்கும் எல்லா வீடுகளிலும் முத்து வடங்கள் தொங்குகின்றன. அவை எதிரே இருக்கும் வணிக வீதியைப் பார்த்துச் சிரிக்கின்றன. "அட பைத்தியக்காரர்களே! நீங்களெல்லாம் தினசரி புதிது புதிதாகக் கொள்முதல் செய்து வாணிபம் நடத்துகிறீர்கள்! ஆனால் நாங்கள் அப்படியல்ல. எதைஇன்று விற்றோமோ, அதையே மீண்டும் எங்களுடையதாக்கிக் கொண்டு நாளை மறுபடியும் விற்கிறோம் நாங்கள். வாணிபத்தில் இந்த வசதி வேறு யாருக்கும் வாய்க்குமா என்பதே சந்தேகந் தான். சூரியன் மலைவாயில் விழும் போது உங்கள் வாணிபம் முடிந்து விடும்; ஆனால் அப்போதுதான் எங்கள் வாணிபம் துவங்கும் ஆகவே, வருகிற வாடிக்கைக்காரர்களை வேறு யாரும் இழுத்துக் கொண்டு போகமுடியாது. அவர்கள் வருவதானால் எங்களைத் தேடி மட்டுமே வரமுடியும். எங்களுக்கோ, எங்களைத் தவிர சரக்கு விற்பனை செய்ய ஒரு குமாஸ்தாகூடக் கிடையாது. சரக்கு விற்கும் முதலாளிகளும் நாங்கள்தான்; அளந்து கொடுக்கும் குமாஸ்தாக்களும் நாங்கள்தான். வருபவன் பணம் கொடுக்கிறான் உங்களுக்குச் சிலர் கொடுப்பதைப் போல. ஆனால் உங்களுக்குப் பணம் கொடுத்தவன், தலையிலே சரக்கைத் தூக்கிக்கொண்டு போகிறான். எங்களிடம் கொடுத்தவன், தான் மட்டுமே திரும்பி நடக்கிறான். துயரப்பட்டுப் பொருள் தேடும் உங்களை எங்களோடு ஒப்பிட்டுப் பார்த்தால், அட பைத்தியக்காரர்களே! எங்கள் தெருவுக்கு உங்கள் தெரு ஈடாகுமா? எங்கள் தொழிலுக்கு உங்கள் தொழில் இணையாகுமா? நாங்கள் கொள்முதல் இல்லாத வியாபாரிகள். குலுக்கும், தளுக்கும், மினுக்குமே விளம்பரமாகக் கொண்டவர்கள்" என்றெல்லாம் அந்த முத்து வடங்கள் சொல்லாமல் சொல்லிச் சிரிக்கின்றன.

> **விற்றிடும்......தன்னை**
> **மீளவும் தமதே யாக்கி**
> **மற்றைய நாளும் விற்கும்**
> **வரைவிலா வீதி; இச்சீர்**
> **கற்றிலா வணிக மாக்கள்**
> **ஆவணக் கவினை நோக்கி**
> **பற்றுவெண் தரளக் கோவை**
> **பத்தியாற் சிரிக்கு மன்றோ!**

—நானும் கவிஞர் முடியரசன் அவர்களும் தோழர் சாமி. பழனியப்பன் அவர்களும் காரைக்குடியிலிருந்து முத்துப்பேட்டைக் கூட்டத்திற்குச் சென்றபோது கவிஞர் முடியரசன் அவர்கள் இந்தப் பாடலை ரசித்துச் சொல்லிக்கொண்டு வந்தார்கள். இதுபோன்ற பாடல்களுக்காகத் தானே புராணங்களை ரசிக்கும் ஆசை பக்தர்களுக்கு ஏற்பட்டிருக்கிறது. நான் அந்த முடிவுக்குத் தான் வந்திருக்கிறேன். "கொக்கோகம் படிப்பதைக் காட்டிலும் புராணம் படிப்பதால் சுகம் அதிகமிருக்கிறது" என்றுதான் பக்தர்கள் எண்ணுகிறார்கள்.

—கண்ணதாசன்

எழில்கவரும் – – – – கொடுங்கோலன்

சேரனைக் கண்டாள் ஓர் சிற்றிடையாள்; கைவளை சோரக் கவிழ்ந்தாள் - துயரம் துணைகொண்டாள். ஆரத் தழுவும் ஆவலே மீக்கூர, கோதையின் நினைவால் கொதித்தாள். செண்டுகொண்டு தோழியருடன் ஆடும்போது, செண்டும் சேரனைக் கொண்டு நடக்க, சிந்தை நொந்தாள். வண்டோச்சி மருங்கணைய வாரானோ என நினைந்தாள். வந்திலன் சேரன். உடுக்கை நெகிழ்ந்தது; வளைக்கை தளர்ந்தது; பசலை மிதந்தது; பாலும் கசந்தது. தெளிவிலா நெஞ்சம் சேரன்பால் நடக்க, அவள் மேனி மெலிந்தது.

மெலிந்த மேனியைக் கண்டனள் அன்னை. "வெண்சிலைப் பாங்கில் வளர்ந்த என் பாவைக்குக் காதலூட்டிக் கரைத்தனன் மேனியை. சேரன், செங்கோலன் என்பர்; அல்லன்! அல்லன்! செங்கோலனாயின், குடி மக்கள் துயரின் நிலையறிந்து நீக்குவனன்றோ? தேவையறிந்து வழங்குவனன்றோ? சாலை அமைத்துச் சத்திரங் கட்டி, குளங்கள் வெட்டி, வாழும் வழியைக் குடிகளுக்கு அமைத்த கோதை, வாழுங் குடியில் ஒருத்தியின் உடலை, வருத்தினன் தன் பேரழகால்! ஆதலின் கோதை கொடுங்கோலனே!" என வரம்புகட்டி வசைமொழிந்தனள் அன்னை!

"தலைவியின் அன்னை உன்னைக் கொடுங்கோலன் என்கிறாள். அவளது அன்னைமட்டுமா? மாந்தை நகரில் உன் பேரெழிலை மாந்திய மடவார் தம் அன்னையர் அனைவரும் உன்னைக் கொடுங்கோலன் என்றே கூறுகின்றனர். பகைவர் வணங்க, அவர் தம் படை வணங்க, அவராளும் நிலங்கவரும் கோதை, தன் குடி மக்களின் உடல் கவர்தல் நெறியாகுமா? அறனாகுமா? என்றெல்லாம் அத்தாயர் கேட்கின்றனர். நடப்பது அறத்தின் மீதெழுந்த வாதம். நியாயந்தானே! பகைவரைப் படுத்தும்பாட்டை உறவினரிடத்தும் காட்டினால், பாகுபாடற்ற அறம் வளர்ப்பவன் என்று உன்னை யார் ஏற்பர்? போரில், வென்று களங்கொண்ட வெஞ்சினவேற் கோதை, குலமாதர் நெஞ்சங் களங்கொண்டு வருத்தினால், அன்னையர் ஏன் தூற்றமாட்டார்கள்?" என்று தலைவியின் தோழி, சேரனை இடித்துரைக்கிறாள்.

சேரன் என்ன பதில் சொன்னான் என்பது தெரியவில்லை நமக்கு. ஆனால் முத்தொள்ளாயிரக் கவிஞன், நீதிபதியாகவும் வழக்கறிஞனாகவும் இருக்கத் தகுதி படைத்தவன் என்பதைக் கவிதை காட்டுகிறது.

சேரன் படைகொண்டு தாக்க - பகை மெலிந்தது!
சேரன் பார்வை கொண்டுதாக்க-பாவை மெலிந்தாள்!
சேரன் பகையின நிலங் கவர்ந்தான்.
அவனே பாவையின் உடல் கவர்ந்தான்!
பகைவர் கெடுதல் நியாயம்!
உறவினர் மெலிதல் என்ன நியாயம்?

"அங்கு கொண்ட பகையேதான், சேரன் இங்கும் கொண்டானா?" - கேட்கிறாள் தோழி!

"ஆம்! அதனால் சேரன் கொடுங்கோலனே!" என முடிவுரைக்கிறாள் அன்னை.

தலைவியோ, மெலிந்தவள் மெலிந்தவள்தான் - சேரன் வந்து கரந்தொட்டு அணைத்தாலன்றி, அவள் மீளமாட்டாள். காதல் அவளைத் தின்றுவிடும்!

> **வரைபொரு நீண்மார்பின் வட்கார் வணக்கும்**
> **நிரைபொரு வேன்மாந்தைக் கோவே—நிரைவளையார்**
> **தங்கோலம் வவ்வுதல் ஆமோ அவர்தாய்மார்**
> **செங்கோலன் அல்லன் என.** — முத். 118 —

[வரைபொரு நீண்மார்பு - மலையைப் போல அகன்ற மார்பு. வட்கார் - பகைவர். கோலம் - எழில். மாந்தை - சேரதேய நகரங்களுள் ஒன்று. வணக்கும் - வணங்க வைக்கும்.]

இலக்கியத்தில் காதல்

காரை

முத்துப்புலவர்

இது பத்துப்பாட்டு!

பத்துப்பாட்டு, பத்துப்பாட்டு என்று சொல்லுகிறார்களே! அந்த வரிசையைச் சேர்ந்த பத்து நூல்களும் என்னென்ன தெரியுமா? இதோ:

> **முருகு பொருநாறு பாணிரண்டு முல்லை**
> **பெருகு வளமதுரைக் காஞ்சி - மருவினிய**
> **கோலநெடு நல்வாடை கோல்குறிஞ்சிப் பட்டினப்**
> **பாலை கடாத்தொடும் பத்து.**

—அதாவது, திருமுருகாற்றுப் படை, பொருநராற்றுப் படை, சிறுபாணாற்றுப் படை, பெரும்பாணாற்றுப் படை, முல்லைப் பாட்டு, மதுரைக் காஞ்சி, நெடுநல் வாடை, குறிஞ்சிப் பாட்டு, பட்டினப்பாலை, மலைபடுகடாம் என்னும் பத்து நூல்களாகும்.

பாரதியின் குணமும் தோஷமும்

ஒரு பாரதி விழாவிலே நான் கலந்துகொண்டேன். அங்கு வந்திருந்த நண்பர்கள் என்னிடம் ஒரு கேள்வி கேட்டார்கள். "உங்களிலேயே சிலர் பாரதியைப் போற்றவும் சிலர் தூற்றவும் செய்கிறார்களே, ஏன்" என்பதுதான் அது! இதே கேள்வியைச் சென்னையில் நடைபெற்ற ஒரு கூட்டத்தில் சொல்வலர் சம்பத் அவர்களிடமும் கேட்டார்கள். அவர் பதில் சொல்லும்போது, "அதுதான் உங்கள் பாஷையிலே குண தோஷ விமர்சனம். குணத்தைச் சிலரும் தோஷத்தைச் சிலரும் ஆராய்கின்றனர்" என்றார். அந்தக் குணத்தையும் தோஷத்தையும் ஒருசேர ஆராய்வதுதான் இந்தக் கட்டுரையின் நோக்கம்.

காலத்தால் அழியாத மா கவிஞர்களில் பாரதியும் ஒருவன் என்பதை மறுக்கமுடியாது. பல துறைகள் பற்றியும் அவன் பாடியுள்ள பாடல்களைச் சுவைக்காத தமிழர்கள் இல்லை. கடுமையாகச் சென்றுகொண்டிருந்த ஒரு நடையிலிருந்து எளிய, புதிய, இனிய நடையை வகுத்துக்கொண்ட பாரதி மக்கட் பிரச்சினையிலிருந்து மகேசுவரன்பிரச்சினை வரையிலே எதையும் விட்டானில்லை. ஆனால், கவிஞனது இதய பாவத்திலிருந்து உணர்ச்சிக் கோளங்களை ஆட்டிப் படைத்துக்கொண்டு நேரத்துக்கு நேரம் புதிது புதிதாகப் பிறந்த கவிதைகள் ஒருவழிக் கொள்கையில் செல்லாமல் சில சில குழப்பங்களுக்கு ஆட்பட்டிருக்கின்றன. ஒரு நேரம் சொன்னதை மறுநேரம் மறுப்பது போல் தோன்றுகிறது சில இடங்களில். ஏன் அப்படித் தோன்றுகிறது? முதலில் சொன்ன கருத்துக்கு இரண்டாவதாகச் சொன்ன கருத்து முரண்படுவானேன்? முதற் கருத்தைச் சொல்லும்போது கவிஞன் உள்ளத்தில் தெளிவில்லையா? அல்லது மறு கருத்தைச் சொல்லும்போதுதான் குழம்பிப் போயிருந்தானா? இது எல்லோருக்குமே ஏற்படும் ஐயம்.

பாடற்பாதைக்கு விதி வகுத்துக்கொண்டு அதே பாதையில் ஒரு நல்ல கவிஞன் பயணம் போவதில்லை. எவ்வெப்பொழுது என்னென்ன தோன்றினாலும் அவ்வப்பொழுது அன்னவற்றைப் பாடிக்கொண்டே போகிறவன்தான் நல்ல கவிஞன் - இயற்கைக் கவிஞன். அப்படிப் பாடுவதிலே அவன் கருத்துக்கள் முரண்பட்டால் அவை அவனது ஒழுங்குபடாத மனநிலையைக் காட்டுமே தவிர, கவித்துவத்துக்கு இழுக்குத் தேட முடியாது. பாரதியின் மனநிலை வடிவம் படைத்த ஒரு கொள்கைக்கு உடன்பாடாக இல்லை. தேச விடுதலையில் அன்று அவனுக்கிருந்த ஆர்வம், ஒரு கொள்கையாக அவனது பாடல்கள் சிலவற்றில் உணர்ச்சியோடு வெளிவருகிறது. அந்த ஆர்வம், முழுமை பெற்றிருந்த காரணத்தால் அதிலே முரண்பாடு இல்லை. மேலும் முரண்பாடு தோன்றக்கூடிய எதிர் சாரிக் கொள்கையொன்றும் அந்தக் கொள்கைக்கு இல்லை. ஆனால், அதே நேரத்தில் சமுதாயக் கொள்கைகளுக்கு அவன் தன்னைச் சரிவர ஈடு கொடுத்துக் கொள்ளவில்லை.

சாதி முறைகளை முழு பலங்கொண்டு தாக்குகிறான், ஒரு சமயம்; "பார்ப்பனக்குலம் கெட்டழி வெய்திய பாழடைந்த கலியுக"மாச்சுதே என ஆயாசப் படுகிறான் மறுசமயம்.

ஆயிரந்தெய்வங்களை ஆத்திரங்கொண்டு சாடி, சைவ வைதீகர்களை "அறிவிலிகாள்!" என அழைத்து, "அறிவொன்றே

தெய்வம்!" என இடித்துரைக்கிறான் ஒரு சமயம்; "முருகா முருகா" என்றும், "மாகாளி சாமுண்டி!" என்றும், "பராசக்தி தேவி" என்றும்,

"கற்பக விநாயகக்
கடவுளே போற்றி!
சிற்பர மோனத் தேவன் வாழ்க!
வாரண முகத்தான்
மலர்த்தாள் வெல்க!
ஆரண முகத்தான்
அருட்பதம் வெல்க!
படைப்புக் கிறையவன்
பண்ணவர் நாயகன்
இந்திர குருஎன திதயத்
தொளிர்வான்
சந்திர மௌலித் தலைவன்
மைந்தன்
கணபதி தாளைக்
கருத்திடை வைப்போம்!"

என்றும்,

"மின்படு சிவசக்தி-எங்கள்
வீரைநின் திருவடி
சரண்புகுந்தோம்"

என்றும், தன் உள்ளம் உருக ஊனெலாம் நெக்குருக, ஆயிரத்தில் தொள்ளாயிரம் கடவுள்களிடம் அன்பு செலுத்துகிறான் மறுசமயம்.

"மேலைநாட்டுச் சாத்திரங்களைத் தமிழில் கொண்டுவந்து குவிக்கவேண்டும்" எனக் குதிக்கிறான் ஒரு சமயம்; "(ஆங்கிலக் கல்வி கற்றதில்) நலமோர் எட்டுணையுங் கண்டிலேன்; இதை நாற்பதாயிரங் கோயிலிற் சொல்லுவேன்!" என்கிறான் மறுகணம்.

"உலகெலாமோர்
பெருங்கன வஃதுளே
உண்டுறங்கி இடர்செய்து செத்திடும்
கலகமானிடப் பூச்சிகள்
வாழ்க்கையோர்
கனவினுங் கனவாகும்"

என்று, "உலகம் மாயை" என்ற தத்துவத்துக்குத் தன்னை ஒட்டிக் கொடுத்துக்கொள்கிறான் ஓரிடத்தில். அதிலும், "சில தினங்கள் உயிர்க்கமுதாகி, செப்புதற்கரியதாக மயக்கும் திலகவாணுதல் மங்கையரின்" மையலை விரும்பி, விரும்பிய கையோடு அதையும் "தெய்விகக் கனவு" என்கிறான்.

அதே நேரத்தில், "வசன கவிதை"யில் உலகத்தின் ஒவ்வொரு அணுவும் இன்பம் என்று அங்கம் அங்கமாகக் கூறுகிறான்.

இவ்வுலகம் இனியது.
இதிலுள்ள வான்இனிமை
யுடைத்து; காற்றும் இனிது
தீ இனிது. நீர்இனிது. நிலம்இனிது,
ஞாயிறு நன்று; திங்களும் நன்று,
வானத்துச் சுடர்களெல்லாம்
மிக இனியன
மழை இனிது, மின்னல் இனிது,
இடி இனிது
கடல்இனிது, மலைஇனிது,
காடு நன்று,
ஆறுகள் இனியன.
உலோகமும் மரமும்
செடியும் கொடியும்
மலரும், காயும், கனியும் இனியன
பறவைகள் இனிய,
ஊர்வனவும் நல்லன
நீர் வாழ்வனவும் நல்லன
மனிதர் மிகவும் இனியர்
ஆண் நன்று. பெண் இனிது
குழந்தை இன்பம்.
இளமை இனிது. முதுமை நன்று
உயிர் நன்று - சாதல் இனிது

—என்று வரிக்கு வரி இன்பம் படைக்கிறான். அது மட்டுமல்ல.

நிற்பதுவே, நடப்பதுவே,
பறப்பதுவே நீங்களெல்லாம்
சொற்பனந் தானோ? - பல
தோற்ற மயக்கங்களோ?
கற்பதுவே, கேட்பதுவே, கருதுவதே
நீங்க ளெல்லாம்
அற்ப மாயைகளோ? - உம்முள்
ஆழ்ந்த பொருளில்லையோ?

—என்றும் கேட்கிறான்.

உலகம் மாயை அல்ல; உண்மை! அதன் தத்துவம் உண்மை. அதன் நடைமுறை இனியது, அதில் வாழ்வதே இனிமை என்று பல இடங்களில் முடிவுகட்டிக் கூறுகிறான்.

இப்படி மாறுபடும் கருத்துக்கள் அவன் கவிதைகளில் பல இடங்களில் விரவிக் கிடக்கின்றன. கற்பனை மலை, கவிதை வெள்ளத்தைப் பெருக்கவிடுகிறது. கவிதை வெள்ளம் பல சரக்குகளை அடித்துக்கொண்டு வருகிறது. அது வெள்ளமானதால் சரக்குகளின் தரத்தைப் பார்த்துச் சுமக்கவில்லை. வந்த சரக்கு விழுகிறது. வெள்ளம் தன் பாட்டுக்கு ஓடிக்கொண்டேயிருக்கிறது. முன்னாலே சொன்னதை எண்ணி, பின்னாலே சொல்லப்போவதையும் எடைபோட்டு, இன்ன கருத்துக்கு இன்ன கருத்து ஒட்டுமா என்று ஈடுகட்டி, பின்னர் கவி பொழியும் 'பரிமாண-பங்கிட்டு' நிலை பாரதியிடம் இல்லை. அவன் பாடினான். அவ்வளவுதான்! நாம் பார்க்கிறோம்; பலப்பல பிடிபடுகின்றன. பாரதியைக் கொண்டு வந்து முன்னாலே நிறுத்திக்கொண்டு, அது ஏன் அப்படி, இது ஏன் இப்படி, என்று நாம் கேட்கமுடியாது. கவிஞன் நடந்துபோகும் பாதைகள் வரம்புக்கு அப்பாற்பட்டவை; வரம்போடு போகும்பொழுது

— 10-ம் பக்கம் —

★ கண்ணதாசன் ★

தேர்தல் வருகிறது; தெரிந்துகொள்ளுங்கள்

J. காமராசர்

‘பார்ப்போம்’ எனும்வார்த்தை பாரிற் பிறப்பதற்குக்
காரணத்தர் யாரென்ருல் ‘காமராஜ்’ என்பார்கள் !
அன்றுமுதல் இன்றுவரை அதைவிட்டு வேருென்றைச்
சொல்லி யறியாத தூயபிரான்; கல்வெடிப்பில்
முன்னுளில் சிற்பியர்கை முடித்த சிலைகளைப்போல்
பெண்வயிற்றில் வந்த பெரியசிலை; “ஆட்சிமுறை
வீசைக் கணக்கில் விற்குமா ?” எனக்கேட்கும்
மாபெரிய ஞானி; மாநிலத்து மக்களுக்கு
வாய்த்த ‘தலையெழுத்து’; வடிவெடுத்த ‘கர்மவினை’
‘மேடெ’ன்ன, ‘குள’மென்ன, வேண்டாம் நமக்கென்று
கூறும் அளவுக்குக் குலம்மறந்த சீராளன் !
வடதிசைக்குச் சென்ற மற்ற நிலத்தவர்கள்
வாங்கிவந்த போது மனங்கனிந்து செங்கோட்டைப்
பாதியையும் விட்டுப் பறந்துவந்த கொடைவள்ளல்
“நாய்க்கோர் எலும்பு; நமக்குப் பதவி”யென
ஏய்க்கும் திருக்குழுவின் இணையற்ற பெருந்தலைவன் !
பந்த்வந்தால் காபி, பண்டிதர்க்குப் பின்‘கூஜா’
தூக்கிப் பறப்பதிலே சூராதி சூரரிவர் !
பச்சைத் தமிழர்எனப் பழந்தலைவர் தந்ததொரு
பட்டந் தவிரப் பசையில்லா ‘நல்’லமைச்சர் !
மானந் தவிர்த்து மற்றெல்லாக் குணங்களையும்
ஒருசேரக் கொண்ட உயர்ந்த தனிப்பெரியர் !
தமிழிலே பேசத் தடவுவார்; ஆங்கிலத்தில்
ஏ. பீ. ஸீ. என்ருல் என்னவெனக் கேட்டிடுவார் !
இந்தியெனும் ஒன்று என்னவோ பாடையென
யாரோ உரைத்ததனை நமக்குரைத்த தல்லாமல்
சுட்டாலும் ஒருவார்த்தை சொல்ல முடியாத
சுடர்விளக்கு இவரென்ருல் சொல்லுதற்கு என்னவுண்டு !
கற்றவர்க ளெல்லாம் ‘கஜகர்ணம்’ போட்டாலும்
முட்ட முடியாத முதலமைச்சர் பதவியினை
தொட்டுத் தடவித் தோளணைத்து நள்ளிரவில்
கட்டிப் பிடித்துக் கலந்து சுகித்திருக்கும்
குருட்டதிட்டக் காரர் ! குணங்களிலே மற்றவற்றைச்
சொல்லப் புகுந்தால் தொலையாது; எந்தமிழின்
தூய்மை கொடாதபடி சொல்லவுந்தான் முடியாது !
ஆகையினுல் இந்த அழகுத் திருவுருவின்
மற்றப் பெருமைகளை மாநிலத்து மக்கள்முனம்
போடத் தயங்குகிறேன்; போட்டால் அவர்களெலாம்
பாய்வரோ என்னும் பயம் !

கண்ணதாசன்

பழந்தமிழ்த் திருமணம் !

பழந்தமிழரின் திருமண முறைகள்பற்றி பல திருமண மேடைகளில் நாம் பேசியிருக்கிருேம். பழந்தமிழ் நாட்டில் திருமணத்தன்று திருமண வீடு எப்படியிருக்கும் என்பதைத் தெரிந்துகொள்ள வேண்டியது அவசியமல்லவா? இதோ :

காளை ஒருவன் தான் கண்டு காதலித்த கன்னி ஒருத்தியைப் பற்றிப் பெற்ருேர்களுக்குச் சொல்கிருன். பெற்ருேர், பிள்ளையின் விருப்பத்திற்கிணங்க அம் மங்கை நல்லாளை ஈன்ருேரிடத்தில் அணுகிப் பெண் கேட்பர். அவர்களும் தம் மகளின் குறிப்பறிந்து மணமுடிக்கச் சம்மதிப்பர். பின்பு இன்பமயமான ஒரு நந்நாளைத் திருமண நாளாகக் குறித்து உற்ருர் உறவினர் அனைவர்க்கும் ஓலை அனுப்புவர். அத்தனை பேரும் அன்று மண வீட்டில் கூடுவர்.

அந்த நாளில்.................

வரு விருந்து மகிழ, உணவளித்து உபசரிப்பார்கள் பெண்ணையும் பிள்ளையையும் பெற்றவர்கள். அந்த உணவு என்ன தெரியுமா? உளுத்தம் பருப்பை அரைத்துக் கலந்து சுவையுறச் செய்த பொங்கல், தும்பைப் பூப்போல் நிறமுடைத்த அரிசியாலான சோறு, காய்கறிக் குழம்பு முதலியன. அன்று வீட்டை ஒளி விளக்குகளால் அலங்காரம் செய்வார்கள். மணம் பரப்பும் மலர் மாலையை வளைய வளையத் தொங்க விடுவார்கள். பந்தலுக்குக் கீழே புதிய மணலைப் பரப்பி அழகுபடுத்துவார்கள். அதிகாலை நேரத்தில், வயது முதிர்ந்தாலும் கணவனை இழக்காமல் வாழ்க்கை நடத்தும் பூவாடைக்காரி என்னும் தாய்மார்கள் மணமக்களை மணமேடையில் உட்காரவைத்து, முதல் முதலில் அவர்களுக்கு மொய் கொடுப்பார்கள். அந்த வயதான ‘கட்டுக் கழுத்தி’கள்தான் திருமணத்தை நடத்திவைப்பார்கள். பின்பு பிள்ளை பெற்று நன்கு வாழும் தாய்மார்கள் நால்வர் கூடி கீழ்க்கண்டவாறு வாழ்த்துவார்கள் :

“கற்பு நெறி வழுவாது, நல்லன யாவும் பெற்று, ஏற்கும் கணவன் மனம் கோணுது, ஒழுக்கந் தவருது, இன்புற்று வாழ்வாயாக”—இப்படிக் கூறி, புதிய நெல்லையும் புதிய மலர்களையும் இரண்டு கைகளிலும் அள்ளிக் கொண்டு, அவர்களின் மீது தூவி மகிழ்வார்கள். இதைத்தான் ‘பூமண மிடுதல்’ என்று இன்றைக்கும் கூறுகிருர்கள். (இதைத் தவிர இன்றைய திருமணங்களில் கையாளப்படும் மற்றைய சடங்குகளெல்லாம் ஆரியச் சடங்குகளே ! ஆ-ர்)

இத்திருமண முறையைக் குறிக்கும் பாடல் இது.

உழுந்துதலைப் பெய்த கொழுங்களி மிதவை
பெருஞ்சோற் றமலை நிற்ப நிரைகால்
தண்பெரும் பந்தர்த் தருமணல் ஞெமிரி
மனைவிளக் குறுத்து மாலை தொடரிக்
கனையிருள் அகன்ற கவின்பெறு காலைக்
கோள்கால் நீங்கிய கொடுவெண் டிங்கள்
கேடில் விழுப்புகழ் நாள்தலை வந்தென
உச்சிக் குடத்தர் புத்தகல் மண்டையர்
பொதுசெய் கம்பலை முதுசெம் பெண்டிர்
முன்னவும் பின்னவும் முறைமுறை தரத்தரப்
புதல்வர்ப் பயந்த திதலையவ் வயிற்று
வாலிழை மகளிர் நால்வர் கூடிக்
கற்பினின் வழாஅ நற்பல உதவிப்
பெற்ருேற் பெட்கும் பிணையை யாகென
நீரொடு சொரிந்த ஈரிதழ் அலரி
பல்லிருங் கதுப்பின் நெல்லொடு தயங்க
வதுவை நன்மணம் கழிந்த பின்றை.

— நல்லூர்க்கிழார் (அகநானூறு)

[அருஞ்பதம் : மிதவை - பொங்கல் ; அமலை-சோறுண்பதால் தோன்றும் ஆரவாரம்; தொடரி - தொங்கவிட்டு ; உச்சிக் குடத்தர் - உச்சியில் சுமந்த குடத்தினையுடையவர் ; புத்தகல் மண்டையர் - புது—அகல் மண்டையர் - கையில் ஏந்திய அகன்ற மண்டையென்னும் பாத்திரத்தை யுடையவர் ; கொடுவெண் திங்கள் - வளைந்த வெண்ணிறம் பொருந்திய சந்திரன்; கம்பலை - ஆரவாரம் ; திதலை-தேமல்; வால் இழை - சிறந்த ஆபரணங்கள்; பெற்ருேன்- தன்னைக் கொண்டவன் ; பெட்கும் - விரும்புகிற ; கதுப்பு - கூந்தல்]

—4-ம் பக்கத் தொடர்ச்சி—

இறங்கியபின், அது சிறிதுதூரம் ஓடி அங்கிருந்த ஒரு புன்னைமரத்தடியில் நின்றுகொண்டது.

பட்டர் தலை தாழ்த்தி வணங்கி நின்ருர். பர்ணசாலைக்குள்ளிருந்து பாவை ஓடிவந்து அமைச்சனின் கழுத்தில் மாலையிட்டாள். நெய்பூசிய கூர்வாளென மை பூசிய கூர்விழியால் ராதை அமைச்சனை நோக்கினுள். இருவர் பார்வையும் ஒன்றையொன்று சந்தித்து உறவாடி சில விஞடிகள் 'ஏதோ' பேசிக்கொண்டன. அமைச்சனின் கண்களில் அவளை அனுபவிக்க வேண்டும் என்ற ஏக்கம் காணப்பட்டது. ராதை அதைப் புரிந்து கொண்டவள்போல் அமைச்சனுக்குத் தன் பார்வையால் காட்டி நாணித் தலைகுனிந்தாள் !

"என்ன கிருஷ்ணஜி !" என்று அமைச்சன் பட்டர் பக்கம் திரும்பினுன். ஆனுல் இதையெல்லாம் பட்டர் அங்கே நின்று கேட்டுக் கொண்டிருக்க, அவருக்கென்ன மதி கலக்கமா ?

பட்டரை அருகே காணுத அமைச்சன், விலகிநின்று பூங்கொடி போல் தோன்றிய ராதையை நெருங்கித் தன்னருகே இழுத்து மார்புறத் தழுவி, செவ்விதழில் முத்தம் பதித்தான் ! அவளை அணைத்தபடியே பர்ணசாலைக்குள் அழைத்துச்சென்ருன்.

நீலவானில் உலாவரும் வெள்ளி நிலாச் சிரித்தது !

பர்ணசாலையைச் சூழ்ந்து நின்ற வண்ணமலர்களும் சிரித்தன !!

பட்டரும் சிரித்தார்...வெற்றிச் சிரிப்புச் சிரித்தார் !!!

காற்று வீசுவதனுல் உண்டாகும் ஓங்கிவளர்ந்த மரங்களின் 'சோ' வெனும் ஓசையும், அருகிலே சலசலக்கும் பளிங்கு நீரோடையின் ஒலியும், நீலவொளி வீசும் அழகிய அந்த இரவிற்கு ஓர் அலாதியான அமைதியைத் தந்துகொண்டிருந்தன !

பர்ணசாலைக்குள்......பஞ்சணையிலே, அமைச்சன் மாறன் காரியின் பிடியிலே, அந்த அந்தணர் குலநங்கை தன்னையே சில வேளைகளில் மறந்துவிட்டாளானுலும்... தன் தந்தை கூறியவைகளை மனதில் கொண்டு கவனமாகவே இருந்தாள் ! காரியத்தையும் வெற்றியாக்கிக்கொண்டாள் !'

பொழுது புலர்ந்து நாழிகை நான்காயிற்று ! பர்ணசாலைக் கதவு திறந்துகிடந்தன! கிருஷ்ணஜிபட்டர் வாயிற்படியிலேயே நின்று எட்டிப் பார்த்தார்...உள்ளே பேச்சரவம் எதுவும் கேட்கவில்லை. ஒருவேளை அயர்ந்து நித்திரை செய்கிருர்களோ என்று எண்ணியவாறு கொஞ்சம் உள்ளே சென்றுபார்த்தார். அங்கே வண்ணக்கலை குலைந்த மேனியோடு வாசமலர் சிதறி அவிழ்ந்து பரந்த கூந்தலோடு ராதை மட்டும் பஞ்சணையில் தூங்கியபடி துவண்டு போய்க் கிடந்தாள் !

கசங்கிய மலராகக் காட்சியளித்த அவரின் அருந்தவப்புதல்வியைக் காணும்போது...மார்பிலும், முகத்திலும் காயம் பட்டுப் போர்க்களத்திலிருந்து திரும்பும் வீரமகனைக் காணும் தாயினும் மகிழ்ந்தார் பட்டர் !

ஆம் ! அவர் மகள் ராதையும் களத்திலே வெற்றி கண்டவள்தான். ஆனுல் அவர் அமைத்த களமும், போர் முறையுமே வேறு !!

திங்கள் இரண்டு கழிந்தன ! மதுரைக்கு வடகிழக்கே ஆறு கல் தொலைவில் உள்ள ஆனைமலையில், அமைச்சன் மாறன்காரியின் முயற்சியால் எழுப்பப்பட்ட பெரியதோர் ஆலயம் முடிந்த நிலையில் காட்சியளித்துக் கொண்டிருந்தது. ஓங்கிய அந்த ஆலயத்தின் அருகே அந்தணர்களுக்கென் அளித்த கிராமங்களில் அவர்கள் குடியிருக்குமாறு வசதிகள் பலவும் அரசாங்கத்தின் செலவிலேயே செய்து தரப்பட்டன !! கடந்த இரு திங்களாக நடைபெற்ற வேள்விகளின் பயனுய் மறையோர் அடைந்த பொன்னும் பொருளும் ஏராளம் ! ஏராளம் ! அவர்கள் அமைச்சனை வாயார வாழ்த்தினர். மங்கை ராதையும், மாறன்காரியும் பர்ணசாலைப் பஞ்சணையில் கொஞ்சிக்கிடந்த இரவுகள் பல.

ஒருநாள் – கதிரவன் ஒளிமங்கிய மாலைநேரம். அப்போதுதான் வந்த ஒரு ஓலையைக் கையில் பிடித்தவாறு ஆழ்ந்த யோசனையில் இருந்தார் கிருஷ்ணஜிபட்டர் ! அமைதியாக ஓரிடத்தில் உட்காராமல் அங்குமிங்கும் அலைந்துகொண்டே மனதைக் குழப்பிக்கொண்டே கிடந்தார் !

இருள் கவிழ்ந்தது ! இப்போது அவர் முகம் ஏதோ ஒரு முடிவுக்கு வந்தவர்போல் காணப்பட்டது. தன் மகள் ராதையை அழைத்து, ரகசியமாக அவள் காதில் ஏதோ கூறிவிட்டு மதுரை நகர் நோக்கி விரைந்தார் அவர் !

நடுஇரவு – ராஜகுருவின் தனியறையில் மூன்று உருவங்கள் ஆழ்ந்த யோசனையில் மூழ்கிக் கிடந்தன......!! ஒரு உருவம் பேசிற்று...! "நான் கூறியவைகளை நீங்கள் செய்து முடித்துவிட்டால் போதும்...இப்போது பெற்றதைவிடப் பொன்னையும், பொருளையும் வாரி வழங்குவேன் அந்தணர்களுக்கு ! ஆலயம் ஒன்றல்ல... நகரிலே காணும் எல்லா முக்கிய தெருக்களிலும் உயர்ந்த ஆலயங்கள் காட்சியளிக்கும் !! உங்கள் வாழ்வு வளமாக நல்லதொரு உரத்தைச் சமுதாய உருவிலே கலந்துவிடுகிறேன். காலத்தாலும் அதை எளிதில் வெல்லமுடியாது !

மற்ருெரு உருவம் அதை ஆமோதித்துக்கொண்டேயிருந்தது ! முடிவில் ஓர் முடிந்த முடிவுடன் மூன்று உருவங்களும் கலைந்தன !! அப்போது ஒரு உருவம் இன்ஞென்றைப் பார்த்துக் கூறிற்று, "குழந்தை ராதை தங்களைப் பார்க்க மிகவும் ஆசையாக இருக்கிருள்...! எதற்கும் தாங்களும் தவருமல் நாளை இரவு வந்துவிடுங்கள்...!" என்று.

மறுநாள் இரவு – அமைச்சன் மாறன்காரியும், அந்தணர் குலமகள் ராதையும், காட்டுமுல்லை தூவிய பட்டு விரித்த மஞ்சத்தில், கதை பல பேசி, ஒருவரையொருவர் தழுவியபடி கிடந்தனர். என்றைக்குமில்லாத முறையில் ராதை தன்னை அழகுபடுத்திக் கொண்டிருந்தாள் அன்று.

"ராதா ! ஏது இன்று அலங்காரம் இவ்வளவு மிகையாக..."

"எல்லாம் இந்த மன்னருக்குத்தான்"

"மன்னரா ! என்ன ராதா... மந்திரிதான் என்பதை மறந்துவிட்டாயா !

"ஏன்? உங்களுக்கென்ன மன்னராகும் தகுதி கிடையாதா? தாங்கள் அமைச்சராய் இருந்தாலும் என் இதயத்தில் ஆட்சிபுரியும் அரசர் நீங்கள்தானே !" என்று கூறிய ராதையை அமைச்சன் தன்னருகே இழுத்து முகத்தோடு முகம் சேர்த்தான் !

"உன் செவ்விதழில் என்றுமில்லாத சுவையை இன்று காண்கிறேன் கண்ணே !..." என்று கூறிய அமைச்சனைத் தானே இறுக அணைத்து மீண்டும் விடாமல் முத்தம் பொழிந்தாள் ராதை.

"என்ன ராஜ...இன்று என்னை வென்றுவிடுவாய் போலிருக்கிறதே!

"அன்பரே !" என்ருள் ராதை !

"என்ன கண்ணே !"—இது அமைச்சன் !

"என் செங்கனி வாயமுதம் சுவை அதிகமா? பிழிந்தெடுத்த கனிரசம் சுவை அதிகமா? வேடிக்கை வேண்டாம்...உண்மையைக் கூறுங்கள்!"

"மீண்டும் சுவைத்துத்தான் சொல்லவேண்டும்" என்று கூறிய அமைச்சன் ராதையின் இடையை ஒரு கையால் பற்றி அருகே இழுத்தான்...!

"ஊ ஹூம்!......முதலில் இது வானுல் பின்பு கனிரசம் பருகவே மறுப்பீர்கள்......என்ருள் ராதை கொஞ்சலாக...!

"சரி, சரி......அப்படியானுல் சீக்கிரம் கொடு அதை" என்ருன் அமைச்சன்.

பழரசம் ஊற்றிக்கொடுத்தாள். அதை அவசர அவசரமாகக் குடித்து முடித்ததும், ராதையை அருகிலே இழுத்து அணைத்தான். "இந்தாருங்கள் குளிர்நீரால் வாயைச்சுத்தம் செய்துகொண்டால்தான் இனிப் பெறப்போகும் சுவையில் தனி இன்பம் காணமுடியும். என்ருள் ராதை. அமைச்சனும் அவ்வாறே செய்தான்.

அவனுக முத்தம் கேட்கும்வரை காத்திருக்கவில்லை அந்தப் பர்ணசாலைப் பாவை. தானே வலிய, இறுக அணைத்து, அமைச்சனை அப்படியே மஞ்சத்தில் படுக்க வைத்துத் தன் பவளம்போன்ற சிவந்த வாயினுல் அவன் உதடுகளைப் பற்றினுள்...! அமைச்சன் கண்களை மூடியவண்ணம் படுத்துக் கிடந்தான். அவள், இறுகத் தழுவியபடி அவன் மார்பின்மேல், தன் இதழ்களால் அவன் உதடுகளைக் கவ்வியபடி படுத்துக்கிடந்தாள் !

அமைச்சன் மயங்கிக்கிடந்தான் ! அவன் நினைத்தான்......அவளின் முத்தத்தின் சுவை இன்பத்தில்தான் இன்று ஏனே மயக்கம் வருவதுபோல் பிரமை தட்டுகிறதென்று ! பாவம்...அறியவில்லை அமைச்சன், நன்றி மறந்த கூட்டம் கனிரசத்தின்மூலம் கடும் நஞ்சை உள்ளே செலுத்திவிட்டதென்று !!

அந்த நேரத்திலும், பர்ணசாலைக்கு வெளியே மூன்று உருவங்கள் தன்னைக் கவனித்துக்கொண்டிருக்கின்றன வென்பதை எப்படி அறிவான் அழகுக்கு அடிமையானதைத் தவிர தீதேதும் செய்தறியா மாறன்காரி !

சில விஞடிகளில் அமைச்சன் உணர்ந்தான் மயக்கம் வெறும் பிரமையல்ல......உண்மையிலேயே தலைசுற்றுகிறதென்று ! அவன் முகமெல்லாம் வியர்த்துக்கொட்டியது. நேரம் ஆக ஆக...வயிறு எரிய ஆரம்பித்தது ! அப்போதுதான் அவனுல் சிந்திக்க முடிந்தது இதில் ஏதோ சூது நடந்திருக்கிறதென்று !

சிறிதுநேரத்தில் அமைச்சன் தெளிவாக உணர்ந்தான் கனிரசம் என்று கடும் விஷத்தைப் பாதகி கொடுத்துவிட்டாளென்று. உடனே அவள் தழுவலினின்றும் விடுபட அமைச்சன் முயன்ருன். "விடடி ராதா ! விடு என்னை" என்று கதறி அவளைக் கீழே தள்ள முயன்ருன். எங்கே அவனை விட்டால் தன்னைக் கட்டாரியால் குத்திக் கொன்றுவிடுவானே என்று பயந்த அவள் அவனை விடாமல் இறுகத் தழுவிக் கொண்டாள் !

"வயிறு எரிகிறதே...! என் உயிர் போகிறதே...!" என்று கதறினுன் அமைச்சன். அவளைக் கீழே தள்ள எவ்வளவோ முயன்றும் முடியவில்லை...! பரிதாபம் ! முன்பு நாளெல்லாம் வாள் சுழற்றும் அந்தக் கரங்கள் இப்போது அந்த வஞ்சகியைக் கீழே தள்ளவும் இயலாது போயிற்று !

"அடி சண்டாளி ! உங்களுக்கு இந்த மாறன்காரி என்ன தீங்கடி செய்தான் ? நன்றி மறந்தவர்களே நீங்கள் செய்தது நல்லதுதானு ? மனதாலும் கேடு நினைக்காத இந்த மாறன்காரியை, — மாவீரன், உயர்ந்தவன் என்று எண்ணிக் கொண்டிருந்த மக்களின் முன் கேவலமாக மடிந்தான் என்று காட்டிக்கொடுக்கிறீர்களே ! உங்களுக்கு அதனுல் விளையப்போவது என்ன ? நீங்கள் எதைக் கேட்டு நான் செய்ய மறுத்தேன் ! அடிபாவி..." என்று அவள் தழுவலினின்றும் விடுவிக்க இயலாது, அவளைத் தன் மார்பின்மேல் தாங்கியவாறே, நெளிந்து, நெளிந்து புரண்டான்...! கதறினுன்...!

அதே நேரத்தில் பயங்கரச் சிரிப்புடன் மூன்று உருவங்கள் பர்ணசாலைக்குள் நுழைந்தன ! உயிர் போகும் தறுவாயிலிருந்த மாறன்காரி தலையைத் தூக்கிப்பார்த்தான்! அங்கே நின்றுகொண்டிருந்த மூன்று உருவங்களையும் கண்டான். ஆம் ! அதில் அவன் இரண்டு உருவங்களைப்பற்றிக் கவலைப்படவே

—10-ம் பக்கம்—

Listen to the Latest
PHILIPS Radio

'236' a Super 'M' Radio for dry battery or AC/DC mains. 4 and 5 valves respectively. Medium and short-wave coverage. All-climate proof.
Rs. 175/-net (Local taxes extra).
A veritable 'peoples' set'.
AUTHORISED PHILIPS RADIO DEALER
RAM BROTHERS
P. B. No : 31, KARAIKUDI.

மாறன்காரி

— 9-ம் பக்கத் தொடர்ச்சி —

இல்லை...! ஆனால் அந்த மூன்றும் உருவத்தைக் காணும்போது மாறன் காரியின் கண்களில் நீர்வழிந்தது! தன்னுடைய கையை உயர்த்தினன் அவர்களை நோக்கி. "நன்றிகொன்ற வர்களே! நீங்கள் எனக்குத் தந்த முடிவு இதுவா...?" என்ற பொருள் கூறிற்று ஓங்கிய அந்தக் கரம்!

சில விநாடிகளில் ஆவி பிரிந்தது! முதலமைச்சன் மாறன்காரி பிண மானுன். மஞ்சத்தில் கிடந்த மாறன் காரியின் பிணத்தை எடுத்து மலர் தூவிய அந்த மஞ்சத்திற்குக் கீழேயே வீசி எறிந்தனர் ராஜகுரு வும், கிருஷ்ணஜிபட்டரும்! அருகில் நின்று மூன்றும் உருவத்தைப் பார்த்துப் பட்டர் ஏதோ காதில் கூறினர். பிறகு பட்டரும், குரு நாதரும் பர்ணசாலையை விட்டு வெளியே வந்தனர்!

அந்த மூன்றும் உருவம் மஞ்சத் தில் அமர்ந்தது. பூங்கொடி போன்ற ராதையும், துவண்டுபோய், கச்சணியாத மார்போடு, இடை யிலே கலைந்து துவளும் மெல்லிய துகிலோடு விலகி நின்றுகொண் டிருந்தாள்!

அவள் கரங்களை எட்டிப்பிடித்துப் பஞ்சணைக்கு இழுத்தது அந்த மூன்றும் உருவம்!

ராதை மறுக்கும் பாவனையில் 'ஊஹூம்' எனத் தலையை அசைத் தாள்! ஏன்? என வினவிற்றுக் கொஞ்சலாக அந்த உருவம்! அப்போது ராதை தன் அழகிய விரலால் சுட்டிக்காட்டினாள்......! எங்கே? "மஞ்சத்தில், நான் இது வரை கொஞ்சிக்கிடந்த மாறன்காரி அதன் அடியிலேயே பிணமாகக் கிடக்கிருன் பார்...! அதற்குள் ளாகவா!..." என்று பொருள் படுமாறு அவன் பிணத்தையா...? இல்லை! இல்லை!—பஞ்சணையைச் சுட்டிக்காட்டினாள்! அங்கே ரத்தக் கறை படிந்து காணப்பட்டது...! ஆம்! கடும் நஞ்சு உட்கொண்டு இறக்கும் தறுவாயில் மாறன்காரி யின் வாயினின்றும் வழிந்த இரத்தமே அது!

இரத்தக்கறை படிந்த பஞ்சணை யின் மேல் விரிப்பான அந்தப் பட்டுத் துகிலைச் சுருட்டி அப்பாலே வீசிற்று அந்த உருவம்! அதே சமயம் தன் இடையிலே மட்டும் அணிந்திருந்த ஒரே ஆடையைப் பஞ்சணைக்குமேல், விரிப்பாக் கினுள் அந்தப் பாவை - அந்தணர் குலமகள்! ஆனால் அப்போது அந்த அறையின் ஒளிவிளக்கை ஊதி அணைத்தது அந்த மூன்றும் உருவம்!

யார் இந்த மூன்றும் உருவம்? ஆம்! அவன்தான் மாறன்காரியின் உடன்பிறந்த சகோதரன் - மாறன் எயினன்! மாறன்காரிக்குப்பின் முதலமைச்சனுக வருவதற்கு வேண்டிய உரிமை படைத்தவன்! நீண்டகாலமாகவே அண்ணனைத் தொலைத்துத் தான் பதவியை அடையவேண்டும் என்று கங்கணம் கட்டிக்கொண்டிருந்தவன்!

மறுநாள்-மதுரை நகரம் சோகத் திலாழ்ந்திருந்தது! காரணம்? உத்த மன் - மாவீரன் - மதுரகவி என் றெல்லாம் புகழ்ப்பட்ட மாறன்காரி முதலமைச்சன், முன்தினம் இரவு சோலையில் தனிமையில் உலவும் போது, மாரடைப்பால் யாரும் கேட்பாரற்று மாண்டு கிடந்தான்' என்பதே.

மறுதிங்கள்! ஆனைமலையில் மாறன்காரியின் முயற்சியால் உரு வாகி முடிந்த உயர்ந்ததோர் ஆலயத்திற்குச் சிறப்பானதொரு முகமண்டபம் அமைத்து அந்தணர் களுக்குக் கிராமங்கள் சிலவற்றைத் தானமாகக் கொடுத்து, வேள்வி கள் பல நடத்தி அவர்களுக்குப் பொன்னையும், பொருளையும் வாரி வழங்கி..., அவ்வாலய வழிபாட் டைத் துவக்கிவைத்தான் அந்த நாட்டு முதலமைச்சன், மாறன் காரியின் உடன்பிறந்த சகோதரன்! மாறன் எயினன்!! ★

தித்திக்குஞ் செந்தமிழ்!

கவிஞர் **கண்ணதாசன்** அவர்களின்

கன்னித் தமிழ்க் காப்பியம்

★ மாங்கனி ★

விலை: ரூபாய் இரண்டு.

கவிஞர் - துரைமாணிக்கம் அவர்களின்

இனிக்குஞ் செந்தமிழ்க் காப்பியம்

கொய்யாக் கனி

விலை ரூ. 2—4—0

- அருணா பப்ளிகேஷன்ஸ் -

தியாகராய நகரம் : சென்னை. 17

குறிப்பு: 'தென்றல்' வாசகர்களுக்கும் விற்பனையாளர் களுக்கும் தனிச் சலுகைகள் உண்டு.

பாரதியின்...

(7-ம் பக்கத் தொடர்ச்சி)

அவனை வாழ்த்தலாம். வரம் பைத் தாண்டும்போது அவனைத் தடுத்து நிறுத்தவோ, தட்டிக் கேட்கவோ யாராலும் முடியாது.

பாரதி உணர்ச்சி வாதி. உணர்ச்சி ஒழுங்குபட்ட அறி வோடுதான் இயங்கவேண்டும் என்று விதியில்லை. திடீரென மேனி கொதிக்கும்; நரம்பு துடிக்கும்; இதயம் துள்ளி எழும். கண்டதைக் கண்டபடி, நினைத்ததை நினைத்தபடி, அப்படியப்படியே கவிஞன் கொட்டிவிடுகிருன். சராசரி மனி தனின் நடைமுறைக்கு ஒத்து வராத பல கருத்துக்களைக் கவி ஞன் கூறிவிடுகிருன். தவருன கருத்துக்களை அழகாகச் சொல்லி விடுகிருன். பொய்யை மெய் போலக் காட்டுகிருன். மெய்யை ஆணி அடித்து நிலைநிறுத்து கிருன். நம்பமுடியாததை நம்ப வைக்கிருன். நர்பக்கூடியதையும் கெடுத்துவிடுகிருன். இவ்வள வும் அவனது உணர்ச்சி செய்யும் வேலைதான். உடலுக்குக் கரு, தாயின் வயிற்றில் தோன்று கிறது என்ருல், உணர்ச்சிக் கருவும் பிறப்போடு வந்துவிடு கிறது. பிறப்போடு வந்து, பழக்கத்தோடு கலந்து, அனுபவ மாகி உடலோடு ஒட்டிவிடுகிற உணர்ச்சிதான் பின்னுளில் திடீ ரென்று கிளர்ச்சியடைந்து கவி ஞனது இதயத்திலிருந்து வார்த் தைகளைக் கொண்டுவந்து வெளி யிலே கொட்டுகிறது.

பாரதியின் உணர்ச்சி வைதீகக் கருவிலே உருவானது. பக்தி அனுபவத்தோடு உடலில் ஒட்டியது. அறிவு முதிர்ந்தபோது அவன் அதை மாற்ற முயன்ருன். அதன் விளைவுதான் சாதிகளைச் சாடியதும், 'ஆயிரம் தெய்வங் களை' அலற அடித்ததும், 'உலகம் என்பது உண்மையே' எனக் கண்டுபிடித்ததுமாகும். திடீரென்று பிறப்போடு வந்த உணர்ச்சி, கிளர்ச்சி பெற்றுப் பெருகுகிறது. அன்றைய காட்சி அவனுக்குத் துணைபுரிகிறது. அறிவாலே மடக்கிப்போட்டு வைத்திருந்த பழைமை உணர்ச்சியை உடலோடு ஒட்டிய அனுபவம் மூடி மறைத்துவிட்டு முன்னுலே வந்து நிற்கிறது. உடனேயே கவிஞன், "முருகா, முருகா" என்கிருன்; 'முன் வரு வாய் பராசக்தி' என்கிருன். கவித்துவம் ஆனந்தமாகக் குதித் துக்கொண்டு வருகிறது. ஆனால் கருத்து முரண்படுகிறது.

முரண்பாடு தோன்றுவதற் குப் பிறப்போடு வந்த உணர்ச்சி காரணம்.

நடைமுறை உலகத்துக்கு நல்ல கருத்து வந்ததற்கு அவன் ஆக் கிக்கொண்ட அறிவு காரணம்.

அதற்கும்மேல் அன்றைக் கிருந்த சமுதாயச் சூழ்நிலை பெருங் காரணம்.

நாம் கண்டுபிடிக்கிற பாரதி யின் 'குணத்'துக்காக நாம் அவனை வாழ்த்தலாம்! 'தோஷ'த் துக்காக நாம் அவனைத் தூற்ற முடியாது.

காரணம் அது அவன் பிறப் போடு வந்த விதி! ★

தியாகராயர் கல்லூரி கட்டிட நிதிக்காக

கலை விழா

அக்டோபர் 6-ம் தேதி முதல் 15-ம் தேதி வரை

சென்னைவண்ணையம்பதி

தியாகராயர்

கலா மண்டபத்தில்

நாள்தோறும் மாலை 6-மணிக்கு நடைபெறும்.

★

6-10-'56 சனி,
7-10-'56ஞாயிறு-டி. கே. எஸ். சகோதரர்களின் "இராஜ ராஜ சோழன்"
8-10-'56 திங்கள்-"எதுவாழ்வு"
9-10-'56 செவ்வாய் என். எஸ். கிருஷ்ணன் குழுவினர் "தள பதி"
10-10-'56 புதன் - சாயி, சுப்பு லட்சுமி நடனம்.
11-10'56 வியாழன்-எஸ். எஸ். ராஜேந்திரன் குழுவினர் "மணி மகுடம்"
12-10-'56 வெள்ளி - சிவாஜி கணேசன் நாடக மன்றத்தின் "விதி ?"
13-10-'56 சனி - எம். ஜி. ராமச் சந்திரன் நாடக மன்றத்தின் "அட்வகேட் அமரன்"
14-10-'56 ஞாயிறு - அறிஞர் அண்ணு தலைமையில் "இன்பக் கனவு"
15-10-'56 திங்கள் சூரிபாபு, இராஜேஸ்வரி குழுவினரின் தாரா சசாங்கம் (தெலுங்கு)

★

நாட்டினரே! நல்லவர்களே!

தலைவர் தியாகராயர் நினைவால் எழுந்த கல்லூரி வளர நிதி தந்து உதவுங்கள்.

சீசன் டிக்கட் :—

ரூ. 100, 50, 25, 15.

தினசரி :—

ரூ. 5, 3, 2, 1, அணு 8.

வாய்வு சூரணம்

உஷ்ணவாய்வு, முழங்கால் வாய்வு, இடுப்புவாய்வு, பித்த வாய்வு, மலக்கட்டு, மலமந்தம், அஜீரணம், புளியேப்பம், கைகள் அசதி - பிடிப்பு, பசியின்மை, செறியாமை, வயிற்றுவலி, பித்த மயக்கம், பித்தசூலை, சோம்பல், முதலான வாய்வு ரோகங்களை அறவே நீக்கி, நல்ல பசி எடுப் பதற்கும் தேகாரோக்கியத்திற் கும் மிகச் சிறந்த சூரணம். மூலிகைகளினால் தயாரிக்கப் பெற்றது.

ஆண்-பெண் யாவரும் உப யோகிக்கக் கூடியது. (பத்திய மில்லை)

5-பலம் டின் 1-க்கு ரூ. 3-0-0

தேவைக்கு :

சம்பு இண்டஸ்ட்ரீஸ்

சேலம்-2

30. வட்டநிலாச் சுட்ட வடு.

வெண்பாப் போட்டி 30-ன் பரிசுபெற்ற வெண்பாவையும், ஏனைய தகுதியுடைய வெண்பாக்கள் சிலவற்றையும் சென்ற இதழில் வெளியிட்டோம். இந்த இதழில் மேலும் சில தகுதியுடைய வெண்பாக்களை வெளியிட்டுள்ளோம்.

கோவை இதழைக் கொடுத்துவிடு நன்மருந்தாய்ச்
சாவை அணைத்திடுவேன் தாமதித்தால்-பாவாய்நீ
எட்டியேன் நின்றாய்? எரிகிறதே உன்முகமாம்
வட்டநிலாச் சுட்ட வடு.

—ஆசிரியர். சவ்வாது, கயற்கண்ணிபுரம்.

★

வேதனைசெய் மாலைக்கு வீண்மாற்றம் தேடுகின்றாய்!
யாதறிவாய் தோழியே! என்மார்பில்-காதலனின்
கட்டமர்தோள் வேதுபட ஒற்றுமல் ஆறாதே
வட்டநிலாச் சுட்ட வடு.

—த. முத்தண்ணன், சென்னை-30.

★

தீயோர் திருந்தத் திருவாய் மலர்ந்தருளும்
நேய முடையோரை நிந்தித்துத்-தூயவர்சொல்
தட்டினோருக் குண்டாகும் தாழ்நிலையே வானத்து
வட்டநிலாச் சுட்ட வடு.

—ச. குருசாமி, சத்திரப்பட்டி.

★

என்று மறையுமோ எங்கொருத்தி கண்வலைமான்
கன்றெனக் கட்டுண் டிருந்தேனைக்-கொன்றொழியா
விட்டகந்தக் கள்ளியை வேட்டிருந்த காலத்தே
வட்டநிலாச் சுட்ட வடு.

—ஆ. அழகன், புதுச்சேரி.

★

காதலால் காய்ந்துருகிக் காயமெலாம் தேய்ந்தருக,
ஏதிலாள் போலே எனைநீங்கி;-ஏதிலாளைத்
தொட்டின்பம் துய்த்துத் திரும்பிய அன்பே!பார்
வட்டநிலாச் சுட்ட வடு.

—பா. வேலன், கோயமுத்தூர்.

★

"என்னமுதே! அன்பே! எழிலரசி! உன்னிப்பார்!
உன்னைப் பிரிந்ததோ ஓரிரவு-மன்னுமெழில்
சொட்டும் வதனத்தில் சோர்வென்சொல்?" "கேளிரவு
வட்டநிலாச் சுட்ட வடு."

—அமுதன், சிக்கருயபுரம்.

★

மட்டுமலர்க் கட்டுடலில் முத்தமழை இட்டிடுவார்
பட்டுச் சிலிர்க்குமடி பைந்தமிழ்போல்-விட்டுசெலின்
கொட்டுதடி இந்தியைப்போல் காட்டமுது மேனியெலாம்
வட்டநிலாச் சுட்ட வடு.

—தமிழ்த்தேவன், வேலூர்.

★

கற்குறியைக் கண்டே பதைபதைத்து வேகின்ற
பொற்றவரைக் கொல்லா தொழியுமோ-சொற்கடங்கா
கட்டழகுப் பாவையுடல் கெட்டொழியச் செய்திட்ட
வட்டநிலாச் சுட்ட வடு.

—செல்வதாசன், மண்ணடி, சென்னை-1.

வெல்லும் வகையின்றி வேதனையோ டென்பிரிவால்
கொல்லுங் கொடுங்காமங் கூர்ந்திரவில்-கார்கூந்தல்
கட்டழகே கண்டேன் கவின்மணக்கும் நின்முகத்தில்
வட்டநிலாச் சுட்ட வடு.

—வி. ப. கோவிந்தசாமி, சென்னை-12.

★

முத்த மழைபொழிந்து முல்லை நகைதேக்கி
அத்தானென் றென்னை அருகணைத்தே-சத்தமின்றி
கட்டிலில தூங்குங்கால் கணமணியே! உன்முகமாம்
வட்டநிலாச் சுட்ட வடு.

—ஆ. கோவிந்தராசன், குடந்தை.

★

தேன்கிட்டும் என்றெண்ணித் தேன்கொட்டும் தில்லிக்கு
ஏன்போனேம் என்றுயிற்(று) என்மகனே-காண்பதற்கு
கிட்டவில்லை நேரமென்றார்! கிட்டியஇச் சொல்லம்பே
வட்டநிலாச் சுட்ட வடு.

—வெ. இறையழகன், பழைய ஆயக்குடி.

★

பட்ட மரந்துளிர்க்கும் பன்னாள் வறுமைக்கண்
பட்டாரும் வாழ்ந்திடுவர் பைந்தொடியே!-துட்டர்கண்
பட்ட மகளுக்கு வையத்தில் வாழ்வேது?
வட்டநிலாச் சுட்ட வடு.

—கமலா, சென்னை-11.

★

உண்ணப்போ மென்றால் பசியிலையே; ஒண்டொடியின்
வண்ணக் கனியமுதம் வாட்டிடுதே-கண்ணுறக்கம்
விட்டதுவே; தென்றல் விரட்டியதே காரணமென்?
வட்டநிலாச் சுட்ட வடு.

—சி. சத்தியமூர்த்தி, இடையன்சாவடி.

★

இன்று வருவார்காண் என்னத்தான்! என்றநினை
வென்றன் மனத்திற் கினிமைதரு-கின்றநிலை
விட்டகலா தொட்டியுற வாடுதலால் மாறுதுகாண்
வட்டநிலாச் சுட்ட வடு.

—பனை. சண்முகம், நெற்குப்பை.

★

கண்சுழற்றிக் கவர்ந்தாள் காதலித்தேன் எண்ணத்தில்
மண்போட்டுச் சென்று மறைந்தாள்-கண்மூடிக்
கட்டையிலே உயிரின்றிக் கிடக்குமட்டும் மாறிடுமோ
வட்டநிலாச் சுட்ட வடு.

—ந. பெரியசாமி, பழனி.

★

தொட்டவுட னேதுவளும் தோகையே! யுன்மார்பிற்
பட்டவடு மாற்றம் பகராயோ?—"கட்டழகா!
விட்டகன்ற உன்மீது வேட்கையா லன்றிரவு
வட்டநிலாச் சுட்ட வடு."

—எம். சுப்பையா, நாரைக்கிணறு.

★

தென்றல் அணைத்தனைய தேன்மழையும் பெய்தனைய
மன்றில் அணைத்தின்பம் மாந்திட்டீர்-சென்றீரோ
கட்டமுடன் வாழ்கின்றேன் காணீரோ என்நெஞ்சில்
வட்டநிலாச் சுட்ட வடு.

—ப. தாமரைச்செல்வன், உடுமலைப்பேட்டை.

★

சீரியராம் தக்கோர்தஞ் சில்பிழையும் செகமீதில்
பூரியரால் மிக்குறுத்திப் பேசுமாபோல்-வீரியராய்
வானிலவும் வீரனுக்குப் புறப்புண் ணேயொக்கும்
வட்டநிலாச் சுட்ட வடு.

—பொன். சின்னதம்பி, சொரத்தூர்.

★

நீயிருக்கும் போது நிலவின் ஒளியென்றன்
காயத்திற் பட்டுக் களிப்புற்றேன்-நீயென்னை
விட்டுப் பிரிந்திருந்தாய் வேல்விழியே! இம்மறுதான
வட்டநிலாச் சுட்ட வடு.

—சோ. பாலகிருட்டினன், மதுரை.

★

பண்டுபோல் இன்றும் புலவர் குறைநீக்கி
வண்டமிழின் நல்வளத்தைப் போற்றிவளர்-வெண்பாவை
விட்டதுவே; நற்புலவர் உள்ளத்தில் "தென்றலெ" னும்
வட்டநிலாச் சுட்ட வடு.

—துரை. சு. வளவன், மேலச்சிவபுரி.

1957-க்கு ....

எம். ஜி. ஆர். நடிக்கும், **கண்ணதாசன்** எழுதும்

சோழ-சாளுக்கிய மாகாவியம்!

கணேஷ் மூவிடோன்

மகா [illegible]

வல்லபன் :

ஆத்திரமே நீதிபதியாகிவிட்டால் அறிவுக்கு வேலை இருக்காதே அரசே! அமைதி கொள்ளுங்கள்! காதல் பாதை ஒரு சருக்குப் பாறை.

மன்னன் :

சந்தர்ப்பத்தால் தவறும் திருடர்களையும் கொலைகாரர்களையும் மன்னிக்கலாம்............திட்டமிட்டுக் காரியம் செய்யும் காயார்த காரர்களை மன்னிக்கக் கூடாது.........



மங்கம்மாள் :

பிரபு! பள்ளி அறையிலே உங்கள் மார்பிலே நான் சாய்ந்திருக்கிறேன். அந்த நேரத்தில் நீங்கள் கண்களை எங்கேயோ செலுத்துகிறீர்கள். உங்கள் மார்பு விம்மித் தாழுகிறது. உங்கள் சூடான பெருமூச்சு என் நெற்றியில் மோதுகிறது. நீங்கள் எதை யோசிக்கிறீர்கள். காதல் உலகில் இருக்கும்போது வேறு சிந்தனை வராது. ஆகவே அது ஒரு பெண்ணைப்பற்றியது. அந்தப் பெண் நிச்சயமாக நானல்ல. ஏனென்றால் நான் உங்கள் அருகிலேயே இருக்கிறேன்.

நடிகர்கள் :

எம். ஜி. ஆர்.
சாவித்திரி
பி. எஸ். வீரப்பா
எம். என். ராஜம்
சந்திரபாபு
கருணாநிதி
சுசீலா
முத்துலட்சுமி

— முதலியோர் —

★

சங்கீதம்

விஸ்வநாதன் ராமமூர்த்தி

— விவரங்கட்கு —

கணேஷ் மூவிடோன்

பசுல்லா ரோடு : : சென்னை- 17

ஆசிரியர், அச்சிடுபவர், வெளியிடுபவர் கண்ணதாசன், ஏ. எல். எஸ். அச்சகம், 2-127, மவுண்ட் ரோடு, சென்னை-6.